விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 219 வள்ளுவர் ஆண்டு 2055 ஆடி 09 வியாழக்கிழமை (25.07.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## எனது அரசியல் பிரவேசம் ஆரம்பமாகியுள்ளது

### மருத்துவர் அர்ச்சுனா



(யாழ்ப்பாணம்)


இன்றில் இருந்து தனது அரசியல் பிரவேசம் ஆரம்பமாகி உள்ளதாக யாழ்ப்பாணம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் முன்னாள் வைத்திய 02

## செம்மலை நீராவியடிப் பிள்ளையார் ஆலய பொங்கல் உற்சவத்தை குழப்ப முயற்சி

### ஆலய நிர்வாகத்தினரோடு பொலிஸார், பிக்கு முறுகல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - பழைய செம்மலை நீராவியடிப் பிள்ளையார் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் நேற்று சிறப்பாக இடம்பெற்றவேளை அதனைக் குழப்பும் முகமாக பாரிய மீன் கூலர் ரக வாகனம் வரவழைக்கப்பட்டு ஆலயத்திற்கு மின் வழங்கும் வயர் அறுக் 15



## இன்று அல்லது நாளை

# ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்படும்

### தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர்



*(கொழும்பு)*

ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதி இன்று அல்லது நாளை அறிவிக்கப்படும் எனத் தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

*(15ஆம் பக்கம் பார்க்க)*

## அரச சொத்துக்களை முகாமைத்துவம் செய்யத் தயார்

### நிதி இராஜாங்க அமைச்சர்

(கொழும்பு)

அரச சொத்துக்கள் முகாமைத்துவ சட்டத்தின் ஊடாக இலங்கையிலுள்ள அனைத்து அரச நிறுவனங்களின் சொத்துக்களையும் 15

## சதொசவில் பொருட்களின் விலைகள் குறைப்பு

(கொழும்பு)

வர்த்தக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சின் ஆலோசனைக்கு அமைய, லங்கா சதொச நிறுவ 15

### பொலிஸ்மா அதிபராகச் செயற்பட

## தென்னக்கோனுக்கு இடைக்காலத் தடை

### இரு நாட்களில் அமைச்சரவையின் நிலைப்பாடு

(கொழும்பு)

பொலிஸ்மா அதிபராக தேசபந்து தென்னக்கோன் செயற்பட உயர்நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்துள்ளது. 15

## இந்த ஆண்டு பாராளுமன்றம் கலைக்கப்படாது

(கொழும்பு)

வரவு செலவுத் திட்டத்தில் ஜனாதிபதித் தேர்தலுக்கு மாத்திரமே நிதி ஒதுக்கப்பட்டுள்ளதால், பாராளுமன்றத்தை இந்த ஆண்டு கலைக்கப் போவதில்லை என 15

### பதில் பொலிஸ்மா அதிபரைக் கொண்டு

## ஜனாதிபதித் தேர்தலை நடத்தத் தடை இல்லை

### மகிந்த தேசப்பிரிய

(வவுனியா)

பதில் பொலிஸ்மா அதிபரைக் கொண்டு ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு எந்தத் தடையும்இல்லை எனத் தேர்தல்கள் 02




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## ஜனாதிபதி ரணிலுக்கு எதிராக யாழில் சுவரொட்டிகள்




(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிரான சுவரொட்டிகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

யாழ் நகரப் பகுதி, மத்திய பேருந்து நிலையம் மற்றும் பிரதான வீதியோரங்களில் நேற்று குறித்த சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

மக்கள் போராட்ட இயக்கத்தினால் தயாரிக்கப்பட்ட குறித்த சுவரொட்டியில் "ரணிலை விரட்டுவோம்" என குறிப்பிடப்பட்டுள்ளது.

நாட்டில் ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ளதால் பரப்புரைகள் சூடுபிடித்துள்ள நிலையில் ரணிலுக்கு எதிராக இவ்வாறான சுவரொட்டிகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. (ம-7)

## இலங்கையில் இடைநிறுத்தப்பட்ட 11 அபிவிருத்தித் திட்டங்களை மீள ஆரம்பித்தது ஜப்பான்

இலங்கையில் இடை நிறுத்தப்பட்ட 11 அபிவிருத்தித் திட்டங்களை மீள ஆரம்பித்தது ஜப்பான்.

உத்தியோகபூர்வ கடன் வழங்கும் குழுவிற்கும் (OCC) இலங்கைக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் (MOU) கையொப்பமிடப்பட்டதைத் தொடர்ந்தும், கடன் மறுசீரமைப்பு தொடர்பான இருதரப்பு உடன்படிக்கையை விரைவாக முடிப்பதற்கு இலங்கை அரசாங்கம் விருப்பம் தெரிவித்ததைத் தொடர்ந்தும், 2022 ஆம் ஆண்டு இலங்கையின் கடனைத் திருப்பிச் செலுத்தாததிலிருந்து இடைநிறுத்தப்பட்ட ஜப்பானின் நிதியிலான கடன் திட்டங்களுக்கான பணக்கொடுப்பனவை மீண்டும் தொடங்க ஜப்பான் அரசாங்கம் உத்தியோகபூர்வமாக முடிவு செய்துள்ளது.

நேற்று இலங்கை அரசாங்கம், ஜப்பான் தூதரகம் மற்றும் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவர் (JICA) இலங்கை அலுவலகம் ஆகியவை இணைந்து இந்த முடிவை நிதி அமைச்சில் ஆரம்பித்து வைப்பதற்காக கூட்டாக செய்தியாளர் மாநாட்டை நடத்தியது.



இலங்கைக்கும் OCC க்கும் இடையிலான கடன் மறுசீரமைப்பு தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் நிறைவடைந்ததற்கு வாழ்த்து தெரிவித்த தூதுவர் மிசுகொஷி OCC இன் இணைத் தலைவராக பொதுக் கடன் மறுசீரமைப்பை வழிநடத்தி முடிப்பதில் ஜப்பான் அரசாங்கத்தின் இதுவரை இல்லாத முயற்சி மற்றும் சிறந்த பங்களிப்பை எடுத்துரைத்தார்.

நாட்டை மீண்டும் ஒரு நிலையான பாதைக்கு வழி நடத்துவதற்கு அவசியமான விரிவான பொருளாதார மற்றும் சமூக சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதில் இலங்கை அதிகாரிகளின் தொடர்ச்சியான முயற்சிகளுக்காக தூதுவர் மிசுகொஷி பாராட்டினார்.

இடைநிறுத்தப்பட்ட அனைத்து யென் கடன் திட்டங்களும் இலங்கையின் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும் முக்கியமான உட்கட்டமைப்புகளாகும் என்றும், இலங்கைக்கு ஆதரவளிப்பதற்கான ஜப்பானின் தொடர்ச்சியான மற்றும் அசைக்க முடியாத அர்ப்பணிப்பை மேலும் உறுதிப்படுத்தும் என்றார். (ம-7)

## செப்டெம்பர் மாதம் ஜனாதிபதித் தேர்தல்

### அமைச்சர் பந்துல குணவர்த்தன

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் செப்டெம்பர் மாதம் நடத்தப்படும் எனவும் ஜனாதிபதித் தேர்தல் அரசியலமைப்பின் பிரகாரம் நடத்தப்படவுள்ளதாகவும் நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி தேர்தலுக்கு தேவையான பணமான 10 பில்லியன் ரூபா, வரவு செலவுத் திட்ட ஆவணத்திலேயே ஒதுக்கப்பட்டுள்ளது.

எனினும் 2 தேர்தல்களை நடத்துவதற்கு அரசாங்கத்திடம் பணமில்லை.

இந்த வருடம் பாராளுமன்ற தேர்தல் நடத்தப்படாது எனவும் பாராளுமன்றம் இந்த ஆண்டு கலைக்கப்படாது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ம-7)

## இ-விசா முறைக்கு எதிராக உயர் நீதிமன்றில் மனு

நடைமுறைப்படுத்தப்படவுள்ள இ-விசா முறையானது நாட்டின் தேசிய பாதுகாப்பு தொடர்பான முக்கிய தகவல்களை உலகிற்கு வெளிப்படுத்தும் அபாயத்தை ஏற்படுத்தியுள்ளது என தெரிவித்து அதற்கு எதிராக முன்னாள் அமைச்சர்களான பாட்டலி சம்பிக்க ரணவக்க, ரவூப் ஹக்கீம், மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் நேற்று (24) உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மனுக்களை தாக்கல் செய்துள்ளனர்.


இந்த மனுவில் சட்டமா அதிபர் பிரதிவாதியாக குறிப்பிடப்பட்டுள்ளார்.

இந்த இ-விசா முறைகளால், நாட்டின் முக்கிய பாதுகாப்புத் தகவல்கள் வெளி தரப்பினருக்கு தெரியவரும் அபாயம் இருப்பதாகவும், இது நாட்டின் பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தலாக அமையும் என்றும் மனுதாரர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இதனால் இந்த நாட்டு மக்கள் பாதகமான விளைவுகளை சந்திக்க நேரிடும் என மனுதாரர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மனுதாரர்கள் தங்கள் மனுவில், தங்களின் அடிப்படை மனித உரிமைகள் மீறப்படுவதாகவும், அதனடிப்படையில் சம்பந்தப்பட்ட அமைப்பை செல்லாததாக்க உத்தரவிட வேண்டும் என்றும் கோரியுள்ளனர். (ம-7)

11ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் சண்முகநாதன் பிரசாத்

தோற்றம்: 05.11.1993

மறைவு: 27.07.2013

எங்கள் செல்வமே பிரசாத்!
இன்றுடன் பதினொரு ஆண்டுகள் முடிவடைந்த போதிலும்
எங்கள் நெஞ்சங்களில் அன்றும் இன்றும் என்றும்
வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றாய்.
இருபது ஆண்டுகள் நம்முடன் குழந்தைத்தனமும்
புன்னகை பூத்த முகத்துடன் வாழ்ந்த வாழ்வை
நினைவு கூர்ந்த வண்ணம் இருப்போம்
உன் இதயம் இந்த உலகில் இல்லா விட்டாலும்
உன் நினைவில்தான் எங்கள் இதயம் துடிக்கிறது
உன் நல்ல உள்ளம் கண்டு ஆண்டவன் சீக்கிரம்
தன்னுடன் சேர்த்து விட்டானோ!
நிச்சயம் நாம் வரும்வரை நமக்காக ஆண்டவன்
காலடியில் காத்திருப்பாய். அதுவரை உன் ஆத்மா
சாந்தியடைய இறைவனை வேண்டிநிற்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பத்திரகாளி கோவிலடி,
பொலிகண்டி கிழக்கு,
வல்வெட்டித்துறை.

என்றும் உன்
அப்பா,
அண்ணிமார், பெறாமக்கள், சோதி அன்ரி

(C-853)

## எனது...

அத்தியட்சகர் மருத்துவர் இராமநாதன் அர்ச்சுனா அறிவித்துள்ளார்.

ஆரம்பத்தில் அரசியலில் ஈடுபடுவதில் தனக்கு விருப்பம் இருக்கவில்லை என்றும் ஆனால் இன்று தான் நேரடி அரசியலில் குதிக்க உள்ளதாகவும் மருத்துவர் அர்ச்சுனா தெரிவித்துள்ளார்.

மருத்துவர் இராமநாதன் அர்ச்சுனா தனது தனிப்பட்ட சமூக வலைத்தளத்தில் வெளியிட்டுள்ள காணொளி பதிவொன்றிலேயே இவ்வாறு கூறியுள்ளார்.

அத்துடன் சொந்தக் கட்சி ஆரம்பித்து அரசியலில் ஈடுபட உள்ளதாகவும் ஏனைய அரசியல் கட்சிகளில் இணையும் தனக்கு இல்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், பெரும்பாண்மையான மக்களின் தேவையை பூர்த்தி செய்யும் ஒரு அரசியல்வாதியாக தான் இருப்பேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-7)

## ஜனாதிபதித்...

ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

நீதிமன்ற விசாரணை முடியும் வரை தேஷபந்து தென்னகோன் தான் முன்பு வகித்த பதவியை வகிக்க முடியும் என்று நம்புவதாக அவர் கூறினார்.

வவுனியா ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் இதனை தெரிவித்தார்.

இன்றைய தினம் பதில் பொலிஸ்மா அதிபராக பொருத்தமான நபர் நியமிக்கப்படுவார் என தாம் நம்புவதாக கூறிய அவர், விசாரணை முடியும் வரை பொலிஸ்மா அதிபர் இல்லை எனவும், ஆனால், பதில் பொலிஸ்மா அதிபரின் கீழ் தேர்தலை நடத்த முடியும் எனவும் தெரிவித்தார்.

நியமிக்கப்பட்ட ஜனாதிபதியின் கீழ் நாடு ஆளப்படும் பட்சத்தில், பதில் பொலிஸிமா அதிபரின் கீழ் தேர்தலை நடத்துவது பெரிய விடயம் அல்ல என்பதால் எந்த பிரச்சினையும் இல்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இலங்கை கடற்படையால் சிறைபிடிக்கப்பட்ட

# இந்திய கடற்தொழிலாளர்களை உடனடியாக விடுதலை செய்க

## ஜெய்சங்கருக்கு ஸ்டாலின் கடிதம்

(புதுடில்லி)

இந்த ஆண்டு ஜனவரி முதல் தற்போது ஜூலை வரை மட்டும் 250 இந்திய கடற்றொழிலாளர்கள் ஸ்ரீலங்கா கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டுள்ள கடற்றொழிலாளர்களை உடனடியாக விடுவித்திட நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கருக்கு எழுதிய கடிதம் ஒன்றிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் தெரிவித்த அவர், "இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 9 கடற்றொழிலாளர்கள் 22-7-2024 அன்று "IND-TN-10-MM-2517" மற்றும் "IND-TN-10-MM-284" பதிவு எண்கள் கொண்ட படகுகளில் கடற்றொழிலுக்குச் சென்றிருந்தனர்.

இந்தநிலையில், அவர்களும், அவர்களது கடற்றொழில் படகுகளும் ஸ்ரீலங்கா கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டுள்ளன.

கடற்றொழிலாளர்கள் இதுபோன்று அச்சுறுத்தப்படுவதும், கைது செய்யப்படுவதும் மற்றும் அவர்களது கடற்றொழில் படகுகள், கருவிகள் பறிமுதல் செய்யப்படுவதும் தொடர்ந்து தடையின்றி நடைபெற்று வருகிறது.

இதனால், கடற்றொழிலாளர்கள் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளனர். எனவே, இந்த நிலைமையைத் தணித்திட உரிய தூதரக முயற்சிகளை துரிதமாக மேற்கொள்ள வேண்டும்.

அத்துடன், பிரச்சினையின் தீவிரத்தை உணர்ந்து இலங்கையிலிருந்து 87 கடற்றொழிலாளர்களையும், 175 படகுகளையும் விரைவாக விடுவித்திட தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்தி உங்களை கேட்டுக்கொள்கிறேன்" என குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 10 ஆண்டுகளில், ஒரு ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மிக அதிகபட்ச கைது எண்ணிக்கை இது என தமிழக முதல்வர் அக்கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## 3000 ரூபாயை தாண்டிய இஞ்சி


(கொழும்பு)

நாட்டில் அண்மைக்காலமாக சற்று குறைந்திருந்த மரக்கறிகளின் விலைகள் மீண்டும் வெகுவாக உயர்ந்துள்ளதாக சந்தைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சந்தையில் ஒரு கிலோ எலுமிச்சம் பழத்தின் விலை ஏறக்குறைய ஆயிரம் ரூபாயை விட அதிகம் என வாடிக்கையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை ஒரு கிலோ பச்சை மிளகாயின் சில்லறை விலை 1000 ரூபாயை தாண்டியுள்ளது.

ஒரு கிலோ இஞ்சியின் சில்லறை விலை 3600 ரூபாயாக உள்ளது. (நி-6)



## தேசபந்து தென்னகோனுக்கு இடைக்காலத் தடை!

(கொழும்பு)

பொலிஸ்மா அதிபராக தேசபந்து தென்னகோன் செயற்படுவதற்கு உயர் நீதிமன்றம் இடைக்கால தடை விதித்துள்ளது.

பொலிஸ்மா அதிபராக தேசபந்து தென்னகோனை நியமிக்க ஜனாதிபதி எடுத்த தீர்மானத்தை வலுவற்றதாக்கி உத்தரவிடக்கோரி தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனுக்கள் நேற்று மீள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.



கர்தினால் மெல்கம் ரஞ்சித் உள்ளிட்ட 8 தரப்பினரால் 9 அடிப்படை உரிமை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## தேர்தலுக்கு தேவையான நிதியினை தாமதமின்றி விடுவிக்குமாறு பணிப்பு

(கொழும்பு)


ஜனாதிபதித் தேர்தலுக்குத் தேவையான நிதியினை விடுவிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிதி அமைச்சுக்கு பணிப்புரை விடுத்துள்ளார். ஜனாதிபதி தேர்தலுக்கான நிதியினை தாமதமின்றி விடுவிக்குமாறும் ஜனாதிபதி பணிப்புரை விடுத்ததாக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்காக வரவு செலவுத் திட்டத்தில் 10 பில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நிதி அமைச்சின் அதிகாரிகளுக்கும் தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்களுக்கும் இடையில் அண்மையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றிருந்தது.

இதன்போது தேர்தல் செலவுகள் குறித்து ஆலோசிக்கப்பட்டதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை, தேர்தல் கடமைகளுக்காக மதிப்பிடப்பட்ட நிதி தொடர்பாக 45 பொலிஸ் பிரிவுகளில் இருந்து அறிக்கைகள் கோரப்பட்டுள்ள அதேவேளை அதன் அறிக்கைகள் கிடைக்கபெற்றுள்ளதாக பொலிஸ் தலைமையகம் குறிப்பிட்டுள்ளது.



கிடைத்துள்ள அறிக்கைகளின் அடிப்படையில் இறுதி செலவு மதிப்பீடு தயாரிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-6)

## 40 ஆண்டுகளின் பின்னும் தொடரும் சிங்கள இனவெறி ஆதிக்கம்

### சீமான் ஆதங்கம்



(சென்னை)

இனப்படுகொலைக்கு உள்ளாகி 40 ஆண்டுகளைக் கடந்த பின்னும் இன்றளவும் சிங்கள இனவெறி ஆதிக்கத்திலிருந்து விடுபட முடியாமல் அடிப்படை உரிமைக்காகப் போராட வேண்டிய அவல நிலையில் தமிழ் மக்கள் வாடுவது வரலாற்றுப் பெருந்துயரமாகும் என நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

1983 ஆம் ஆண்டு இலங்கை இனவாத அரசின் ஆதரவுடன் சிங்கள இனவெறியர்கள் தமிழர்களின் வீடுகளையும் கடைகளையும் எரித்து உடமைகளைக் கொள்ளையடித்து வீதிகள் தோறும் குருதியில் நனைய, வீடுகள் தோறும் பிணங்கள் வீழ திட்டமிட்டு பல்லாயிரக்கணக்கான அப்பாவித் தமிழ் மக்களைக் கொன்றழித்த கறுப்பு ஜூலை இனப்படுகொலை நாள்.

ஈழத்தாயகத்தில் தமிழர்கள் இனப்படுகொலைக்கு உள்ளாகி 40 ஆண்டுகளைக் கடந்த பின்னும் இன்றளவும் சிங்கள இனவெறி ஆதிக்கத்திலிருந்து விடுபட முடியாமல் அடிப்படை உரிமைக்காகப் போராட வேண்டிய அவல நிலையில் தமிழ் மக்கள் வாடுவது வரலாற்றுப் பெருந்துயரமாகும்.

சிங்கள இனவெறிக்கு இலக்காகி கறுப்பு ஜூலை இனப்படுகொலையில் கொல்லப்பட்ட தமிழ் மக்களுக்கு என்னுடைய கண்ணீர் வணக்கத்தைச் செலுத்துகிறேன் என அவர் தெரிவித்துள்ளார். (நி-6)

## பேக்கரி உணவுப் பொருட்களின் விலைகளைக் குறைக்க நடவடிக்கை

### பேக்கரி உரிமையாளர் சங்கம்

(கொழும்பு)

எதிர்வரும் சில தினங்களில் பேக்கரி உற்பத்திப் பொருட்களின் விலைகளை குறைக்க முயற்சிப்பதாக அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் எம்.கே. ஜயவர்தன தெரிவித்தார்.

கோதுமை மா இறக்குமதி செய்யும் இரு நிறுவனங்களுடன் கலந்துரையாடியதன் பின்னர் இது தொடர்பில் தீர்மானம் எடுக்கப்படவுள்ளது.

இதன்படி பேக்கரி உற்பத்திப் பொருட்களின் விலைகளை 10 ரூபாயினால் குறைக்க கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

கோதுமை மாவின் விலை குறைக்கப்பட்டால், பேக்கரிப் பொருட்களின் விலை குறைக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.



நுகர்வோர் உணரக் கூடிய விலையில் பேக்கரி பொருட்களின் விலை குறைக்கப் பட வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## இராமநாதன் கல்லூரிக்கு பளுதூக்கலில் 5 பதக்கங்கள்



வடக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான பளுதூக்கல் போட்டியில் யா/இராமநாதன் கல்லூரிக்கு 5 பதக்கங்கள்.

வடக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான பளுதூக்கல் போட்டி யா/மத்திய கல்லூரியில் அண்மையில் நடைபெற்றது.

இப் போட்டியில் இராமநாதன் கல்லூரியை பிரிதிநிதித்துவப்படுத்தி 17 வயதுப்பிரிவில் 45Kg எடைப் பிரிவுக்குள் செல்வி பிரணதி தங்கம், 59Kgஎடைப்பிரிவுக்குள் செல்வி வைஷ்ணவி வெண்கலம் மற்றும் 20 வயதுப்பிரிவில் 55Kg எடைப் பிரிவுக்குள் செல்வி மயூரணி வெள்ளி, 59Kg எடைப்பிரிவுக்குள் செல்வி சங்கவி வெள்ளி, 87Kg எடைப் பிரிவுக்குள் செல்வி பிறேம ஜீவணி வெள்ளிப் பதக்கத்தையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## மாந்தை கிழக்கு விநாயகபுரம் அ.த.க பாடசாலைக்கு 18 பதக்கங்கள்




வட மாகாண பாடசாலைகளுக்கு இடையேயான மல்யுத்தம், யூடோ, தைக்வொண்டோ போட்டிகளில் முல்லைத்தீவு மாந்தை கிழக்கு விநாயகபுரம் அ. த. க பாடசாலைக்கு 18 பதக்கங்கள்.

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான ஆண்கள், பெண்களுக்கான மல்யுத்தம், யூரோ, தைக்வொண்டோ போட்டிகள் அண்மையில் முல்லைத்தீவில் நடைபெற்றது.

இதில் முல்/மாந்தை கிழக்கு விநாயகபுரம் அ. த. க பாடசாலை மாணவர்கள் மல்யுத்தப் போட்டியில் 2தங்கம், 4வெண்கலம், டைகோன்டோ போட்டியில் 1வெள்ளி 3 வெண்கலம் , ஜுடோ போட்டியில் 1 தங்கம் , 3 வெள்ளி , 4 வெண்கலம் என மொத்தமாக 18 பதக்கங்களை பெற்றுக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6-90)

## நினைவு சின்னம் அருகே தற்காலிக மைதானங்கள்



ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறும் நாடுகளில் வழக்கமாக ஒரு நகரமே உருவாக்கப்பட்டு புதிதாக மைதானங்கள் கட்டப்பட்டு போட்டிகள் நடத்தப்படும்.

ஆனால் பாரீசில் 95 சதவீதம் ஏற்கெனவே உள்ள ஸ்டேடியங்களிலும் தற்காலிக மைதானங்கள் அமைக்கப்பட்டு போட்டிகள் நடத்தப்படுகிறது.

அதிக அளவில் புதிய கட்டுமானங்கள் மேற்கொள்வதை குறைத்து சுற்றுச்சூழல் மாசுபாடு ஏற்படுவதை தவிர்க்கும் விதமாக இந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஒலிம்பிக் போட்டியை நேரில் காண வரும் ரசிகர்களை கவரும் வகையில் தற்காலிக மைதானங்கள் பாரீஸ் நகரின் முக்கிய அடையாள சின்னங்களான ஈபிள் டவர், கிரான்ட் பேலஸ் அருங்காட்சியகம் உள்ளிட்ட இடங்களில் அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு தற்காலிகமாக அமைக்கப்படும் அரங்கங்கள் போட்டிகள் முடிந்தவுடன் அகற்றப்பட்டு மறுசுழற்சிக்கு உட்படுத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## அரையிறுதிக்கு முன்னேறிய இந்திய மகளிர் அணி



நேபாள அணியை வீழ்த்தி இந்திய மகளிர் அணி அரையிறுதி சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது.

9 ஆவது ஆசிய கோப்பை மகளிர் கிரிக்கெட் தொடரின் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற போட்டியில் இந்தியா, நேபாளம் அணிகள் மோதின.

இந்த போட்டியில் முதலில் நாணய சுழற்சியில் வென்ற இந்திய அணி துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

அதன்படி இந்திய அணி 20 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை இழந்து 178 ஓட்டங்களை குவித்தது.

179 என்ற வெற்றி இலக்கோடு களமிறங்கிய நேபாள அணி 20 ஓவர்கள் நிறைவில், 9 விக்கெட்டுகளை இழந்து 96 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

இதனால் இந்திய அணி 82 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றியை தழுவியது.

இந்திய அணி சார்பில் தீப்தி ஷர்மா மூன்று விக்கெட்டுகளையும் அருந்ததி ரெட்டி மற்றும் ராதா யாதவ் தலா இரண்டு விக்கெட்டுகளையும் ரேனுகா சிங் ஒரு விக்கெட் வீழ்த்தினர். இதில் வெற்றி பெற்றதன் மூலம் இந்திய அணி அரையிறுதி சுற்றுக்கு முன்னேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 22 ஆவது திருத்தச் சட்டமூல வாக்கெடுப்பை எதிர்க்கட்சிகள் புறக்கணிக்க வேண்டும்

## சமந்திரன் எம்.பி கோரிக்கை

(கொழும்பு)

22ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்டமூலம் பாராளுமன்றத்தில் வாக்கெடுப்புக்கு எடுத்துக் கொள்ளப்படும் பட்சத்தில் எதிர்க்கட்சிகள் பாராளுமன்றத் திலிருந்து வெளிநடப்பு செய்ய வேண்டுமென இலங்கை தமிழரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் கோரியுள்ளார்.

தனது எக்ஸ் தளத்தில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அரசியலமைப்பின் 22 ஆவது திருத்தமானது வாக்காளர்களைக் குழப்புவதற்கான முயற்சி எனவும், ஜனாதிபதித் தேர்தல் செயல்முறையை அது சிக்கலாக்குவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த சட்டமூலம் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்படுமாயின் பொதுசன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும்.



அதற்கான திகதியை முடிவு செய்யும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு.

ஜனாதிபதித் தேர்தலின் வாக்களிப்புத் தினத்துடன் முரண்படும் வகையிலான திகதியை ஜனாதிபதி நிர்ணயிக்கக்கூடும் என இலங்கை தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் அச்சம் வெளியிட்டுள்ளார். (நி-6)

# கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்த அமெரிக்க கப்பல்

(கொழும்பு)

அமெரிக்கக் கடற்படையைச் சேர்ந்த யுஎஸ்எஸ் மைக்கல் மர்பி என்ற கப்பல் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கொழும்பு துறைமுகத்துக்கு வந்துள்ளது.

155 மீற்றர் நீளமுள்ள, இந்த ஏவுகணை எதிர்ப்பு கப்பல் 323 பேர் கொண்ட குழுவினரால் நிர்வகிக்கப்படுகிறது.

கொழும்புக்கு வருகை தந்த கப்பலை இலங்கை கடற்படையினர் பாரம்பரிய கடற்படை மரபுக்களுக்கமைய வரவேற்றனர்.



கப்பலின் கப்டன் ஜொனாதன் பி.கிரீன்வால்ட் மேற்கு கடற்படை கட்டளை தளபதி ரியர் அட்மிரல் சிந்தக குமார சிங்கவை மேற்கு கடற்படை கட்டளைத் தலைமையகத்தில் சந்தித்துள்ளார். இந்தக் கப்பல் நாளை வெள்ளிக்கிழமை நாட்டில் இருந்து புறப்படவுள்ளது. (நி-6)


**லங்கா மஹால் (PVT) LTD**

DHL

**உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை**

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை. (181)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :
**0091956615671 9**

WESTERN UNION WU | MoneyGram | Ria MONEY TRANSFER

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,
077 839 3974


## பொது அறிவித்தல்-வலிகாமம் மேற்கு பிரதேச சபை

**18.07.2024 ஆம் திகதிய பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரம் பின்வருமாறு திருத்தியமைக்கப்படுகின்றது.**

2323/61ஆம் இலக்க 18.03.2023 ஆம் திகதிய இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு அதிவிசேட வர்த்தமானி பிரசுரத்திலுள்ள எமது சபைக்குச் சொந்தமான J/165 கிராம சேவகர் பிரிவில் அமைந்துள்ள கீழ் காட்டப்படும் வீதியினை பெயர் மாற்றம் செய்யுமாறு அப்பகுதி மக்கள் மற்றும் பொது அமைப்புக்கள் எமது சபையைக் கோரியுள்ளனர். விபரங்கள் வருமாறு.

தற்போதைய பெயர்-நல்லமாவடி வீதி
உப அலுவலக பிரிவு- வட்டுக்கோட்டை உப அலுவலகம்
வீதி தொடர் இலக்கம்-93
வீதியின் நீளம் -1.213 Km
வீதியின் ஆரம்பம்- மாவடி-மூளாய் வீதி
வீதியின் முடிவு- கார்த்திகேசு வித்தியாலய வீதி
மாற்றப்படவுள்ள பெயர்-**கலைக் விஸ்வநாதன் வீதி**

எனவே இவ் வீதி பெயர் மாற்றத்திற்கு ஆட்சேபனை ஏதும் இருப்பின் எதிர்வரும் 07.08.2024 ஆம் திகதிக்குள் எழுத்து மூலம் செயலாளர், வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம் எனும் முகவரிக்கு அறியத் தருமாறு கேட்டுக்கொள்கின்றேன். (1546)

செயலாளர்,
வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம் (24.07.2024)

## அளவெட்டி மல்லாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

### மின்பிறப்பாக்கி விற்பனை

எமது சங்கத்தில் பாவித்த இயங்கு நிலையிலுள்ள 7.5 KW இந்தியன் சுவராஜ் (Model No.96A 621) மின்பிறப்பாக்கி கூறுவிலை மூலம் விற்பனை செய்ய தீர்மானித்துள்ளனர். எனவே இவ் மின்பிறப்பாக்கியை பெற்றுக்கொள்ள விரும்புபவர்கள் சங்கத் தலைமைக் காரியாலயத்தில் காரியாலய நேரத்தில் (முற்பகல் 09.00 - பிற்பகல் 04.30 வரை) பார்வையிட்டு கூறுவிலைகளை பொது முகாமையாளர், அளவெட்டி மல்லாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், கூட்டுறவாளர் வீதி, அளவெட்டி என்னும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ 14.08.2024 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம். மேற்படி கூறுவிலைக்கான கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "மின்பிறப்பாக்கிக்கான கூறுவிலை" என குறிப்பிடல் வேண்டும். (சி-854)

பொதுமுகாமையாளர்,
அளவெட்டி மல்லாகம் ப.நோ.கூ.சங்கம் அளவெட்டி.

# இராசிபலன்

25.07.2024
ஆடி 9 , வியாழக்கிழமை
சதுர்த்தி முற்பகல் 8.45 மணிவரை
பூரட்டாதி முன்னிரவு 8.46 மணிவரை
சுபநேரம் - 7.32-9.02 மணிவரை
இராகுகாலம் - 1.32-3.02 மணிவரை
சந்திராஷ்டமம்.
புநர்பூசம், பூசம்

வளவன்

**மேஷம்**
நண்பர்கள் கடைசி நேரத்தில் கை கொடுத்து உதவுவர், பயணங்களால் பயனுண்டு, ஆரோக்கியத்தில் கவனம் தேவை, வழக்கத்தை விட கூடுதல் நேரம் பணி புரியும் சூழ்நிலை ஏற்படலாம்.

**ரிஷபம்**
அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், பொது வாழ்வில் பாராட்டும் புகழும் கூடும் நாள், வாகன சுகமுண்டு, போசன நன்மையுண்டு.

**மிதுனம்**
தொழில் வளர்ச்சி கூடும் நாள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், அரசு வழியில் அனுகூலம் உண்டு.

**கடகம்**
பூர்வீகச் சொத்து சம்பத்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, மறதியால் விட்டுப் போன காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள்.

**சிம்மம்**
வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், உதவி செய்த சிலரே உதாசீனப்படுத்துவது கண்டு வருத்தமடையலாம், ஆதயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம்.

**கன்னி**
குடும்பத்தினருடன் குதூகலம் தரும் பயணங்கள் இடம் பெறலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள்.

**துலாம்**
சுப செய்திகள் வந்து சேரலாம், தலைமைப் பதவிகள் உங்களைத் தேடி வரலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், உடல் நலன் சீராகும், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்**
தொலை தூரத்து உறவினர்களின் சந்திப்பு இடம் பெறலாம், சுப செய்திகள் வந்து சேரலாம், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், தாழ்ந்த சுபாவமுண்டு.

**தனுசு**
பாசமிக்கவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், ஆடம்பரப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.

**மகரம்**
சேமிப்பில் அக்கறை காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம்.

**கும்பம்**
ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த கவலைகள் தீரும், நண்பர்களால் வளர்ச்சி கூடும், கேட்ட இடத்தில் உதவிகள் கிடைத்து உற்சாகமடைவீர்கள்.

**மீனம்**
திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், குடும்ப இரகசியங்களை மற்றவர்களிடம் பேசாதிருப்பது நல்லது, விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**உனது குணம் சரியாக இருந்தால் உன் புகழும் நிலையாக இருக்கும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிமன்றுக்கு போதையில் வந்த நபர் விளக்கமறியலில்

(யாழ்ப்பாணம் )


நீதிமன்றிற்கு வழக்கு விசாரணைக்கு மது போதையில் வந்த நபரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

யாழ். நீதவான் நீதிமன்றில் இடம் பெற்ற குடும்ப வன்முறை தொடர்பான வழக்கு விசாரணையின் போது.

குறித்த நபர் மது போதையில் மன்றுக்கு விசாரணைக்கு வந்ததை அடுத்து, அந் நபரை கைது செய்த நீதிமன்ற பொலிஸார் மன்றில் அவரை முற்படுத்தினர்.

அதனை அடுத்து கைது செய்யப்பட்ட நபரை எதிர்வரும் 14 நாட்களுக்கு விளக்க மறியலில் வைக்குமாறு மன்று உத்தரவிட்டுள்ளது. (நி-6-33)

# விநோத தூக்குக் காவடி



(யாழ்ப்பாணம்)

கைதடி ஸ்ரீ வாலாம்பிகை அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு கடந்த திங்கட்கிழமை சிறுவர்கள் விநோத தூக்குக்காவடி எடுத்து நேர்த்திக் கடனை நிறைவேற்றியிருந்தனர்.

ஆலயத்தின் தீர்த்த உற்சவத்தை முன்னிட்டு இவ் நேர்த்திக்கடன் நிறைவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6-30)

# கெற்பேலியில் மணல் அகழ்வில் ஈடுபட்ட 4 டிப்பர்கள் பறிமுதல்

## மூவர் கைது



கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கெற்பேலிப் பகுதியில் நேற்று புதன்கிழமை காலை சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட 4 டிப்பர் வாகனங்கள் கொடிகாமப் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டதுடன் மூன்று சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விடத்தற்பளை-கெற்பேலிப் பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெறுவதாக பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலின் அடிப் படையில் விரைந்து செயற்பட்ட பொலிஸார் மேற்படி கைது நடவடிக்கையை முன் னெடுத்துள்ளனர்.

இதன்போது சந்தேகநபர் ஒருவர் தப்பித்துள்ள நிலையில் மற்றைய மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். கைப்பற்றப்பட்ட டிப்பர் வாகனங்களும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக் கப்ப் டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6-30)

# வலுவிழந்தோர்களுக்கான சாரதி அனுமதிப்பத்திர பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் வதியும் சாரதிஅனுமதிப்பத்திரம் தேவையான செவிப்புல வலுவிழந்தோர்களுக்கான முதற்கட்ட எழுத்துப் பரீட்சை நாளை வெள்ளிக்கிழமையன்று யாழ். மாவட்ட மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் இடம்பெறவுள்ளது.

எனவே சாரதிஅனுமதிப்பத்திரம் தேவையான செவிப்புல வலுவிழந்தோர் பிறப்பு சான்றிதழின் மூலப் பிரதி,தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டு சாரதி அனுமதிப்பத்திரத்திற்காக தேசிய போக்குவரத்து வைத்திய நிர்வாகத்தில் பெற்றுக்கொள்ள மருத்துவச் சான்றிதழ் முகவரியை உறுதிப்படுத்துவதற்காக கிராம அலுவலரிடம் இருந்து பெற்ற வதிவிட குணநல சான்றிதழ் (DS-04) குறித்த ஆவணங்களுடன் யாழ். மாவட்ட மோட்டார் போக்குவரத்து திணைக்களத் தில் பதிவுககளை விரைவாக முன்னெடுக்குமாறு யாழ். மாவட்ட பதில் அரச அதிபர் அறிவித்துள்ளார். (நி-6)

# காரைநகர் ஐயப்ப சுவாமி கொடியேற்றம் நாளை

(யாழ்ப்பாணம்)

காரைநகர் வியால் வில் பதி ஐயப்ப சுவாமி தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் நாளை வெள்ளிக்கிழமை பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் உற்சவங்கள் இடம் பெறவுள்ளன.

ஓகஸ்ட் மாதம் 3 ஆம் திகதி பகல் 10.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் 4 ஆம் திகதி ஆடி அமவாசைத் தினத்தன்று தீர்த்தத்திருவிழாவும் அன்று மாலை கொடியிறக்க வைபவமும் இடம்பெறவுள்ளது. (நி-6)

# நாய்களுக்கான விலங்கு விசர்நோய் தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை எல்லைக்குள் அமைந்துள்ள யாழ். நகர் ii பொது சுகாதார பரி சோதகர் பிரிவுக்குற்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு இலவசமாக விலங்கு விசர் நோய் தடுப்பூசி (ARV) கீழ்வரும் இடங்களில் வைத்து தடுப்பூசி ஏற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தித் தங்களது வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசியை பெற்றுக்கொள்ளுமாறு யாழ். மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார்.

| திகதி | நேரம் | தடுப்புமருந்து ஏற்றப்படும் நிலையத்தின் பெயர் |
|---|---|---|
| 26.07.2024 | மு.ப-9-11 | அத்தியடி பிள்ளையார் கோவிலடி அத்தியடி. |
| | மு.ப-11- 1 | ஸ்ரான்லி வீதி பெற்றோலியக் கூட்டுத்தாபனம் முன்பாக. |
| | பி.ப-2.30-4 | கோவில் வீதி நாவலர் வீதி சந்தி. |
| 29.07.2024 | மு.ப-9-11 | இராசாவின் தோட்ட வீதி , ஸ்ரான்லி வீதி. |
| | மு.ப-11- 1 | கோவில் வீதி றக்கா வீதி சந்தி. |
| | பி.ப-2.30-4 | மருதடி லேன் வைரவர் கோவிலடி. |
| 30.07.2024 | மு.ப-9-11 | நல்லூர் தெற்கு சனசமூக நிலையம். |
| | மு.ப-11- 1 | றக்கா வீதி இளம்சிங்கம் சனசமூக நிலையம். |
| | பி.ப-2.30-4 | கோவில் வீதி ஆஸ்பத்திரி வீதி. |
| 31.07.2024 | மு.ப-9-11 | மடம் வீதி திருவள்ளுவர் சனசமூக நிலையம். |
| | மு.ப-11- 1 | அருள்மாதா கோவிலடி ராசாவின் தோட்டம். |
| | பி.ப-2.30-4 | மாட்டீன் வீதி சப்பல் வீதி சந்தி. |
| 01.08.2024 | மு.ப-9-11 | 2 ஆம் குறுக்குத்தெரு வேம்படி வீதி யாழ்ப்பாணம். |
| | மு.ப-11- 1 | OLR. தேவாலயம் 4 ஆம் குறுக்குத்தெரு. |
| | பி.ப-2.30-4 | யாழ். புகையிரத நிலைய வீதி வைரவர் கோவிலடி. |
| 02.08.2024 | மு.ப-9-11 | கோயில் வீதி ரயில் தண்டவாள சந்தி. |
| | மு.ப-11- 1 | ஆஸ்பத்திரி வீதி கோயில் வீதி சந்தி. |
| | பி.ப-2.30-4 | சோமசுந்தரம் வீதி. |
| 05.08.2024 | மு.ப-9-11 | பழைய பூங்கா பகுதி. |
| | மு.ப-11- 1 | சுவாஸ் லேன். |
| | பி.ப-2.30-4 | கொழும்புத்துறை வீதி விதானையார் வீதி சந்தி. |
| 06.08.2024 | மு.ப-9-11 | சந்தனமாதா கோவில் பகுதி. |
| | மு.ப-11- 1 | கச்சேரி கிழக்கு ஒழுங்கை. |
| | பி.ப-2.30-4 | குருசோ வீதி கிறின்பிலட் வாசிகசாலை. |
| 07.08.2024 | மு.ப-9-11 | மத்தியூஸ் வீதி சென்சாள்ஸ் ஆரம்பப் பாடசாலை. |
| | மு.ப-11- 1 | காட்டுக் கந்தோர் ஒழுங்கை. |
| | பி.ப-2.30-4 | கச்சேரி நல்லூர் வீதி நாவலர் வீதிச்சந்தி |

(நி-6)

# சீன நன்கொடை அரிசி வழங்கும் செயற்றிட்டம்

## கிளிநொச்சியில் ஆரம்பம்

(கண்டாவளை)

சீன அரசாங்கத்திடமிருந்து கடற்றொழிலாளர்களுக்கு பெற்றுக்கொள்ளப்பட்ட அரிசி வழங்கும் செயற்றிட்டம் கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது

குறித்த அரிசி அடங்கிய இரண்டு கொள்கலன்கள் கடந்த 16ஆம் திகதி கனரக வாகனமொன்றில் கிளிநொச்சி மாவட்டத்தை வந்தடைந்த நிலையில், குறித்த அரிசி வழங்கும் நிகழ்வு பூநகரி கடற்றொழில் அலுவலகத்தில் மாவட்ட கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் பா.ரமேஸ் கண்ணா தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பூநகரி கடற்றொழில் அலுவலக உத்தியோகத்தர்கள், கிளிநொச்சி மாவட்ட கடற்றொழிலாளர் சம்மேளத்தின் தலைவர், மாவட்ட அபிவிருத்திக் குழு அலுவலக உத்தியோகத்தர்கள் மற்றும் பயனாளிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டிருந்தனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் கடற்றொழில் திணைக்களம் ஊடாக 2,981 கடற்றொழிலாளர் குடும்பங்களுக்கு இருபது கிலோக்கிராம் அரிசி வீதம் வழங்கப்படவுள்ளது. அதே வேளை குறித்த திட்டம் பளை, கண்டாவளை, பூநகரி, நாச்சிக்குடா ஆகிய நான்கு கடற்றொழில் அலுவலகங்கள் ஊடக தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு விநியோகம் செய்யப்படவுள்வுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6-315-316)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசபந்து மீதான நீதிமன்ற உத்தரவு தேர்தல்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தாது

## பவ்ரல் அமைப்பு தெரிவிப்பு

(கொழும்பு)

தேசபந்து தென்னக்கோன் தொடர்பில் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவு தேர்தல்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தாது என பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

தேசபந்து தென்னக்கோன் பொலிஸ் மா அதிபராக கடமையாற்றுவதற்கு இடைக்காலத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

உச்ச நீதிமன்றினால் இந்த இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

எனினும் இந்த தடையுத்தரவு தேர்தல் நடத்துவதில் எவ்வித தாக்கத்தையும் செலுத்தாது என பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாரச்சி தெரிவித்துள்ளார்.

புதிய பதில் பொலிஸ் மா அதிபரின் கீழ் தேர்தல் பணிகளை முன்னெடுக்க முடியும் என அவர் தெரிவித்துள்ளார். (நி-6)

# ஏற்றுமதி வருமானம் ஜூனில் அதிகரிப்பு

(கொழும்பு)

2024ஆம் ஆண்டின் மே மாதத்துடன் ஒப்பிடுகையில் கடந்த ஜூன் மாதத்தில் ஏற்றுமதி வருமானம் அதிகரித்துள்ளதாக தரவுகள் தெரிவிக்கின்றன.

இலங்கை சுங்க திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள தற்காலிக தரவுகளுக்கு அமைய ஜூன் மாத ஏற்றுமதி வருமானம் 1.97 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜூன் மாதம் ஏற்றுமதி வருவாய் 1031.2 மில்லியன் அமெரிக்க டொலராக பதிவாகியுள்ளது.

இது 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2.58 சதவீத அதிகரிப்பாகும் என கூறப்பட்டுள்ளது.

இந்த அதிகரிப்பு ஆடை, தேயிலை, இறப்பர் மற்றும் தென்னை சார்ந்த ஏற்றுமதிகளின் காரணமாக பதிவாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-6)

# க.பொ.த சா/த பரீட்சை பெறுபேறுகள் செப்டெம்பருக்குள்

## கல்வி அமைச்சர் சுசில்

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப்பரீட்சை பெறுபேறுகளை செப்டெம்பர் மாதத்திற்குள் வெளியிட திட்டமிடப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

மேலும் உயர்தர மற்றும் ஏனைய பரீட்சைகளை முன்னதாக நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகவும் பரீட்சை கால அட்டவணையை புதுப்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

சாதாரண தர உயர்தர மற்றும் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைகளுக்கான விடைத்தாள்களை மதிப்பீடு செய்வதற்கான கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

அண்மைய க.பொ.த (சா/த பரீட்சைக்கு பின்னர் உடனடியாக ஆரம்பிக்கப்பட்ட உயர்தர வகுப்புக்களுக்கான கற்கைகள் தற்போது வெற்றிகரமாக முன்



னேறி வருவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (நி-6)

# சங்கிலியன் பூங்காவில் பனைவார கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சங்கிலியன் பூங்காவில் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமான பனைவாரக் கண்காட்சி நாளை மறுதினம் சனிக்கிழமை வரையில் நடைபெறவுள்ளது.

இக்கண்காட்சியில் பனையிலிருந்து கிடைக்கும் பல்வேறு வகையான உணவு உற்பத்திப் பொருட்களும் கைப்பணிப் பொருட்களும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

பனை தென்னை அபிவிருத்தி கூட்டுறவு சங்கங்களும் வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களமும் இணைந்து குறித்த கண்காட்சியை ஏற்பாடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6-33)

# எரிவாயு தட்டுப்பாடு சீர்செய்யப்பட்டது-லிட்ரோ

(கொழும்பு)

நாட்டின் சில பகுதிகளில் லிட்ரோ சமையல் எரிவாயுவுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாகப் பாவனையாளர்கள் தெரிவித்தனர்.

எனினும் இது தொடர்பாக ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள லிட்ரோ நிறுவனம் தற்போது இந்த நிலைமை சீர்செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

கடந்த சில நாட்களாகப் போக்குவரத்து பிரச்சினைகள் காரணமாக சில இடங்களுக்கு லிட்ரோ எரிவாயு கொள்கலன்களை விநியோகிக்க முடியாத நிலை ஏற்பட்டிருந்தது.

நேற்று முதல் இந்த நிலைமை சீர்செய்யப்பட்டுள்ளது என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-6)



பாஷையூர் புனித அந்தோனியார் றோ.க.மகளிர் வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் (பிரான்ஸ்) நிதி அனுசரணையில் தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையிலும் க.பொ.த (சா/த மற்றும் உ/த) பரீட்சையிலும் சித்தியடைந்த மாணவர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை கௌரவிக்கப்பட்ட போது...


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 24<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: MBA, Finance Analyist<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி, உத்தியோகம்.<br>தொ.இ: B/14692 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>4 இல் செவ்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: BA, Admi nistation<br>விவாகரத்தானவர்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ: G/14053 |
| பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 27 1/2<br>9 இல் சூரி செவ்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: College, Teacher<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: B/14693 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>8 இல் செவ்<br>கி.பா: 16 3/4<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:MBBS, Doctor<br>எதிர்பார்ப்பு: Doctor, அரச உத்தியோகம்<br>தொ.இ: G/14055 |
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 6 3/4<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: Bank Assistant<br>எதிர்பார்ப்பு: நற்குணமுள்ள பெண்<br>தொ.இ: B/14696 | பிறப்பு: 1997 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 28<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: Bsc, Electrical Engineer, Quan tity Assurance Engineer(Pvt)<br>எதிர்பார்ப்பு: Engineer, Accountant<br>தொ.இ: G/14057 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## தாய்வான் எல்லையில் சீன போர்க்கப்பல்



(தாய்பேய்)

தாய்வானின் எல்லையில் சீனாவுக்குச் சொந்தமான 8 போர்க்கப்பல்கள் மற்றும் 22 விமானங்கள் பறந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது

இதில் 15 விமானங்கள் எல்லையைத் தாண்டி தாய்வானுக்குள் நுழைந்ததாக கூறப்படுகிறது.

இதனால் கடல் மற்றும் வான் எல்லைப் பகுதியை உன்னித்து கவனித்து வருவதாக தாய்வான் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை சீனாவின் கட்டுப்பாட்டில் இருந்த தாய்வான் 1949 இல் தனி நாடாகப் பிரிந்தது. ஆனால் அதனை மீண்டும் தன்னுடன் இணைத்துக் கொள்ள சீனா மீண்டும் திட்டமிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## எத்தியோப்பியாவ
## 229 பேர் உ
## உயிரிழப்பு மேலும் அதிக

(அடிஸ்அபாபா)

**எத்தியோப்பியாவில் ஏற்பட்ட பயங்கர நிலச்சரிவில் சிக்கி 229 பேர் உயிரிழந்துள்ளனர்.**

கடந்த 21ஆம் திகதி தெற்கு எத்தியோப்பியாவின் கெஞ்சோ சாச்சா கோஸ்டி மாவட்டத்தில் கோபா மண்டலத்தில் பெய்த கடும் மழையால் அங்கு நிலச் சரிவு ஏற்பட்டது.

இரண்டு நிலச்சரிவுகளைத் தொடர்ந்து சுமார் 50 உடல்கள் சேற்றில் இருந்து எடுக்கப்பட்டதாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்நிலையில் நேற்று வெளியான தகவலின் படி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 229 ஆக அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை அப்பகுதியில் தேடுதல் பணிகள் தொடர்ந்து நடை பெற்று வருவதால் உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என்று அஞ்சப்படுகிறது. (நி-6)

## பிரம்மபுத்திரா போர்க்கப்பலில் தீ விபத்து

(டில்லி)

இந்திய கடற்படைக்கு சொந்தமான ஜஎன்எஸ் பிரம்மபுத்திரா போர்க்கப்பலில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

மும்பையில் உள்ள கடற்படைத் தளத்தில் கப்பலில் பராமரிப்பு பணிகள் மேற்கொண்டபோது விபத்து ஏற்பட்டுள்ளது. இதில் மாலுமி ஒருவரை காணவில்லை என கடற்படை தெரிவித்துள்ளது. மேலும், இதன் காரணமாக கப்பல் ஒரு பக்கமாக சாய்ந்துள்ளது. பல்வேறு முயற்சிகள் மேற்கொண்ட பின்னரும்




அதனை நிமிர்த்த முடியவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. காணாமல் போன மாலுமியை தேடும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கப்பலில் இருந்த மற்ற அனைவரும் பத்திரமாக இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.என்.எஸ் பிரம்மபுத்திரா போர்க்கப்பலில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை தீ விபத்து ஏற்பட்டுள்ளது. தொடர்ந்து கடற்படை தளத்தில் இருந்த மற்ற கப்பல்களின் உதவியுடன் திங்கட்கிழமை காலை தீ முழுவதுமாக அணைக்கப்பட்டுள்ளது.

ஜஎன்எஸ் பிரம்மபுத்திரா கடந்த 2000 ஆவது ஆண்டில் இந்த கப்பல் இந்திய கடற்படையில் இணைக்கப்பட்டது. உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட போர்க்கப்பல் இது.

இதில் 40 அதிகாரிகள் மற்றும் 330 மாலுமிகள் பணியில் உள்ளனர். 125 மீற்றர் நீளம் கொண்ட இந்தக் கப்பலில் மீடியம் ரேஞ், குளோஸ் ரேஞ், ஆன்டி-ஏர்கிராப்ட் துப்பாக்கிகள், கடற்பரப்பில் இருந்து வானுக்கும் பரப்புக்கும் ஏவுகணையை ஏவ முடியும். இதில் போரின் அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கிய வகையில் அதிக சென்சார்களைக் கொண்டுள்ளது. ஹெலிகொப்டர்களையும் இதிலிருந்து இயக்க முடியும். (நி-6)

## நிபா வைரஸ் பரவல்!
### கேரளாவில் அவசர நிலை அறிவிப்பு



(டில்லி)

இந்தியாவின் கேரளா மாநிலத்தில் சுகாதார அவசரநிலை அறிவிக்கப்பட்டுள்ளது.

நிபா வைரஸ் பாதிப்பால் 14 வயது சிறுவன் உயிரிழந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளதுடன் இந்த வைரஸால் பாதிக்கப்பட்ட மேலும் 60 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.


இந்நிலையில், நிபா வைரஸ் பரவலைத் தடுக்க உடனடியாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து கேரள அரசுக்கு மத்திய சுகாதார அமைச்சகம் 4 ஆலோசனைகளை வழங்கி உள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி-6)

## நேபாளத்தில் விமா
## 18 பேர் உயி



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ...வில் நிலச்சரிவு
# ...உயிரிழப்பு!
## ...கரிக்கலாம் என அச்சம்



...ல்

...வேளை
...ல் யணி
...ட பெற்று
...ரிழப்பு
...மேலும்
... என்று
(நி-6)

# கமலா ஹரிஸ் முன்னிலையில் கருத்துக் கணிப்பில் தகவல்



(வோஷிங்டன்)

அமெரிக்க துணை ஜனாதிபதி கமலா ஹரிஸ் ஜனநாயக கட்சியினர் மத்தியில் வேகமாக தனது ஆதரவை அதிகரித்து வருவதும் தனது புதிய போட்டியாளர் காரணமாக முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நெருக்கடியை எதிர் கொள்ளக்கூடும் என்பதும் ரொய்ட்டரின் கருத்துக் கணிப்பின் மூலம் தெரியவந்துள்ளது.

ஜூலை 22 முதல் 23ஆம் திகதிக்குள் ரொய்ட்டர் -இப்சொசின் கருத்துக் கணிப்பில் பதிவுசெய்யப்பட்ட வாக்காளர்கள் மத்தியில் கமலா ஹரிசிற்கு 44வீத ஆதரவு காணப்படுவதும் டொனால்ட் ட்ரம்பிற்கு 42 வீத ஆதரவு காணப்படுவதும் தெரியவந்துள்ளது.

இந்த கருத்துக்கணிப்பின் மூலம் கமலாஹரிஸ் நிலையான முன்னேற்றத்தை காண்பிப்பது தெரியவந்துள்ளது.

இதேவேளை பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களில் 84 வீதமானவர்கள் ஜோ பைடன் தேர்தலில் போட்டியிடுவதிலிருந்து விலகியதை வரவேற்றுள்ளனர். (நி-6)

...ய
...ு.
...ட
...ம்
...ள
...ட
...த்,
...ட்
...து
...க
...ல்
...க
...க
...க்
...க
...டி
...)

# கடலில் மிதக்கும் கிராமம்

(பீஜிங்)

The Tankas அல்லது boat people என அழைக்கப்படுபவர்கள் தெற்கு சீனாவில் வாழ்ந்துவரும் ஒரு சமூகத்தினர்.


இவர்கள் பாரம்பரியமாக குவாங்டாங், குவாங்சி, புஜியான், ஹைனான், ஷாங்காய், ஜெஜியாங் மற்றும் யாங்சே ஆற்றின் கரையோரப்பகுதிகளிலும், ஹாங்காங் மற்றும் மக்காவ் போன்றவற்றின் கரையோரப் பகுதிகளிலும் படகுகளில் வாழ்ந்துவருகிறார்கள்.

இந்த படகுகளிலேயே அவர்களுடைய தங்கும் அறைகள், சமையலறைகள் மற்றும் குளியலறைகள் உள்ளன. திருமணம் முதல் இறுதிச் சடங்குகள் வரை படகுகளிலேயே தமது வாழ்நாளைக் கழித்து வருகிறார்கள்.

இவர்களுடைய வாழ்க்கையில் பெரும்பாலான பகுதி நீரையும் மீன்களையும் சுற்றியே காணப்படுகிறது.

பெரும்பாலானவர்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டாலும் பலர் உப்புத் தொழிலில் ஈடுபடுவதையும் சிலர் முத்துக்குளிக்கும் தொழிலில் ஈடுபடுவதையும் காணலாம்.

பலர் இப்போது கரையோரத்தில் வசித்தாலும், பழைய தலைமுறையைச் சேர்ந்த சிலர் இன்னும் தங்கள் படகுகளில் வாழ்ந்து தங்கள் பாரம்பரிய வாழ்வாதாரமான மீன்பிடியைத் தொடர்கின்றனர். (நி-6)



# ...ான விபத்து
# ...ரிழப்பு

(காத்மண்டு)

நேபாளத்தில் 19 பயணிகளுடன் புறப்படத் தயாரான விமானம் ஒன்று நேற்று புதன்கிழமை காலை விபத்துக்குள்ளாகியுள்ளது.

தலைநகர் காத்மண்டுவில் உள்ள திருபவுன் சர்வதேச விமான நிலையத்தில் இந்த விமான விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் 18 பேர் உயிரிழந்துள்ளதாக விமான நிலையம் ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளது.

பலத்த காயங்களுடன் மீட்கப்பட்ட விமானி, அருகில் உள்ள வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

நேபாளத்தின் சவுர்யா விமான நிறுவனத்திற்கு சொந்தமான அந்த விமானம், பொக்காரா என்ற ரிசார்ட் நகருக்கு புறப்பட்டபோது விபத்துக்குள்ளாகியிருக்கிறது.

விபத்தைத் தொடர்ந்து விமான நிலையம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. (நி-6)

# தென்கொரிய ஜனாதிபதி அலுவலகத்தில் விழுந்த வடகொரிய குப்பை பலூன்கள்

(சியோல்)

கடந்த சில நாட்களாக வடகொரியா இராட்சத பலூன்களில் குப்பைகளை நிரப்பி தென் கொரியாவுக்குள் அனுப்பி வருகின்றது.

வடகொரியாவின் இந்த செயலுக்குத் தென் கொரியா கடும் கண்டனத்தைத் தெரிவித்து வருகின்றது.

இந்த நிலையில் குப்பை கள் நிரப்பப்பட்ட வட கொரிய பலூன்கள்



நேற்றுக் காலை தென் கொரியாவின் ஜனாதி பதி அலுவலக வளாகத்தில் விழுந்ததாக அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாஸா எரிப்பு; தண்டனையே அவசியம்

## அதாவுல்லா வலியுறுத்து

(கொழும்பு)

ஜனாஸா எரிப்பு தொடர்பாக மன்னிப்புக் கொடுப்பதை விடுத்து அதற்குக்காரணமானவர்களுக்குத் தண்டனை பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் எம்.எல்.எம். அதாவுல்லா வலியுறுத்தியுள்ளார்.

நேற்றைய பாராளுமன்ற அமர்வில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், பாராளுமன்றத்தின் அதிகாரத்தை மீறி ஜனாஸாக்களை எரிக்க வர்த்தமானி ஒன்றை அப்போதைய அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி வெளியிட்டிருந்தார்.

கொரோனா பெருந்தொற்றுக் காலத்தில் ஜனாஸாக்களை எரித்தமை குறித்து மன்னிப்பு கோரியமை நல்ல விடயம். ஆனால் பாராளுமன்றத்தின் அதிகாரத்தையும் மீறி ஜனாஸா எரிக்க வர்த்தமானி வெளியிடப்பட்டமையால் பாராளுமன்றத்தின் சிறப்புரிமை மீறப்பட்டது.

இவ்விடயம் தொடர்பாக நான் பல தடவை இந்தச் சபையில் கேள்வியெழுப்பியுள்ளேன். எனவே மன்னிப்புக் கேட்பதை விட அதற்கான தண்டனையை யாருக்கு வழங்குவது என்பதை இந்த பாராளு மன்றம் தீர்மானிக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப் பினர் எம்.எல்.எம். அதாவுல்லா மேலும் குறிப்பிட்டுள்ளார். (நி-6)

---

### யுக்திய நடவடிக்கை

# போதைப்பொருள் குற்றச்சாட்டு 661 பேர் கைது

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் கடந்த 24 மணித்தியாலத்திற்குள் மேற்கொள்ளப்பட்ட யுக்திய நடவடிக்கையின் போது போதைப்பொருள் குற்றம் தொடர்பில் 661 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களில் 652 ஆண்களும் 9 பெண்களும் அடங்குவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களில் 21 பேர் பொலிஸ் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளதுடன், 18 பேர் புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து 1,256 கிராம் 428 மில்லி கிராம் ஹெரோயின், 434 கிராம் 667 மில்லிகிராம் ஐஸ், 653 கிராம் 688 மில்லிகிராம் கஞ்சா என்பன கைப்பற்றப்பட்டுள்ளன. (நி-6)

---

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 180 | 250 | 200 |
| உருளைக்கிழங்கு | 220 | 260 | 250 | 300 |
| பச்சைமிளகாய் | 500 | 550 | 450 | 700 |
| தக்காளி | 350 | 300 | 450 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 160 | 180 | 200 |
| கோவா | 300 | 350 | 400 | 400 |
| கரட் | 350 | 450 | 480 | 600 |
| பூசணி | 200 | 240 | 230 | 250 |
| புடோல் | 150 | 250 | 180 | 200 |
| வாழைக்காய் | 200 | 240 | 250 | 200 |
| சின்ன வெங்காயம் | 300 | 250 | 400 | 300 |
| பெரிய வெங்காயம் | 250 | 380 | 250 | 250 |
| பாகற்காய் | 600 | 700 | 600 | 600 |
| வெண்டக்காய் | 200 | 250 | 200 | 200 |
| கருணைக் கிழங்கு | 150 | 160 | 180 | 200 |
| பயற்றங்காய் | 200 | 320 | 150 | 300 |
| லீக்ஸ் | 450 | 500 | 550 | 600 |
| பீற்றூட் | 400 | 380 | 400 | 500 |
| கறிமிளகாய் | 800 | 800 | 850 | 1000 |
| முருங்கைக்காய் | 300 | 350 | 450 | 300 |
| போஞ்சி | 600 | 700 | 650 | 700 |
| கத்தரி தம்புள்ள | 150 | 150 | 250 | 180 |
| கீரை - 1 பிடி | 80 | 80 | 60 | 100 |
| தேசிக்காய் | 600 | 600 | 600 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 130 | 90 | 80-120 |
| இராசவள்ளி | 350 | 450 | 650 | 600 |
| வெங்காயப்பூ | 200 | 300 | 400 | 500 |
| முள்ளங்கி | 100 | 120 | 120 | 100 |
| பொன்னாங்காணி | 80 | 30 | 80 | 60 |
| வல்லாரை | 50 | 40 | 60 | 80 |
| ஈரப்பலா | 100 | 80 | 60 | 60 |

---

# இன்று ஒரு தகவல்

193



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

# துளசி மகிமை

அலுவலகத்திலே ஏகப்பட்ட கணக்குவழக்கைப் பார்த்து விட்டு மாலை களைத்துப் போய் வீட்டிற்கு திரும்புகின்றார் ஒருவர். அந்தச் சமயம் பார்த்து கணக்குப் புத்தகத்தை எடுத்துக் கொண்டு பையன் ஒடி வருகின்றான் அவரிடம். இந்தக் கணக்குப் புரியவில்லை அப்பா கொஞ்சம் எப்படி என்று சொல்லிக் கொடுங்கள் என்றான். அப்பா தன்னை விட கணக்கிலே வீக் என்கின்ற ரகசியம் அவனுக்கு எங்கே தெரியப் போகின்றது.

அப்பா பார்க்கின்றார் காலையிலே சொல்லித் தருகின்றேன் இப்போது களைத்துப் போய் வந்திருக்கின்றேன் மூளை சரியாக வேலை செய்யாது இப்போது என்று சொல்லி ஒரு மாதிரியாக சமாளித்தார்.

இது போன்ற அப்பாக்களுக்கெல்லாம் ஒரு யோசனை. உங்களுக்கெல்லாம் களைப்பாக இருக்கின்ற சமயத்திலே தேநீர் சாப்பிட வேண்டும் என்று தேன்றும். அதற்கு பதிலாக துளசி தேநீர் சாப்பிட்டுப் பாருங்கள். அதை சாப்பிட்டால் மூளைக்கு சுறுசுறுப்பு வந்து விடுமாம். புத்துணர்சி கிடைக்குமாம். அதற்கு பின் உங்கள் பையன் கொடுக்கின்ற கணக்கைச் சரியாக போட்டாலும் போட்டு விடுவீர்கள்.

சரி அதை சாப்பிடத் தயார். அது எந்தக் கடையிலே கிடைக்கும்? இது தானே உங்கள் கேள்வி. கடையிலே கிடைக்காது. நீங்கள் வீட்டிலே தயார் செய்யவேண்டும். வீட்டிலே சமயல் நீங்கள் தானே? இல்லையா? பரவாயில்லை. யார் சமையல்காரரோ அவர்கள் இதை காதிலே வாங்குவது நல்லது.

துளசி இலை 10. ஒரு குவளையிலே இந்த 10 துளசி இலையைப் போட்டு காய்ச்ச வேண்டியது. ஏலக்காய் - 2, தேன் 2 ஸ்பூன், கொஞ்சம் பசும்பால் இதை கலந்து கொள்ள வேண்டியது. அவ்வளவு தான். காலையிலே இந்த மாதிரி தயார்செய்து குடித்தீர்கள் என்றால் நாள் முழுவதும் சுறுசுறுப்பாக இருக்குமாம். ரத்தமும் சுத்தமாகுமாம்.

சாதாரணமாக நாம் தேநீர் தயார் செய்வது மாதிரி கூட இந்தத் துளசி தேநீரை தயார் செய்யலாம். தேயிலைக்கு பதிலாக ஒரு பத்து பதினைந்து துளசி இலையைப் போட வேண்டியது அவ்வளவும் தான்.

துளசியை சாதாரணமாக நினைத்து விடாதீர்கள். துளசி இலையிலே அதிசயமான சில எண்ணெய்ப்பொருள் இருக்கின்றது. பாம்புக்கடிக்கு உபயோகப்பட கூடிய சில மருந்துச் சத்துக்கள் எல்லாம் துளசி இலையிலே உண்டு. இரத்த அழுத்தத்தைக் குறைக்கக் கூடிய குணமும் அதற்கு இருக்கின்றது.

துளசி இலையை எங்கேயாவது கண்டால் சும்மா விட்டு விடாதீர்கள். பறித்து வாயிலே போட்டுக் கொள்ளுங்கள். சும்மா மெண்டு முழுங்குகின்ற போது குடல் பகுதியிலே மென்மை உண்டாகின்றது. ஒரு சில குடல் நோய்களையும் அது தீர்க்கும். இருதய தசையிலே உள்ள இறுக்கத்தை தளர்த்தி சுகம் கொடுக்கக் கூடிய தன்மையும் துளசிஇலைக்கு உண்டு. வயிற்றுப்புண், ஆஸ்துமா, மார்பு சம்பந்தமான சளி, இரத்த அழுத்தம், குடல் சம்பந்தமான நோய்கள் எல்லாவற்றிற்கும் துளசி கைகண்ட மருந்து. இது மாதிரி கோளாறுகளுக்கெல்லாம் துளசி தேநீர் சாப்பிட்டால் குணம் தெரியும்.

லக்னோவிலே உள்ள கிங் ஜார்ஜ் மெடிக்கல் கல்லூரி மருத்துவ நிபுணர்கள் கண்டுபிடித்துச் சொல்லியிருக்கின்றார்கள். வெறும் துளசி இலையைப் பறித்து சாப்பிட்டாலே உடம்பு வலி, அசதி, சோர்வு பசியின்மை எல்லாம் ஓடிப்போய்விடுமாம். லக்னோ கல்லூரி டொக்டர் நரேந்திரசிங் இதைச் சொல்லுகின்றார்.

"தினசரி துளசி இலையைச் சாப்பிட்டுக் கொண்டு வந்தால் உடம்பிலே புகக்கூடிய பலவகையான நோய்க்கிருமிகளை எதிர்த்து அழிக்கின்ற சக்தி நமக்கு கிடைத்து விடும்" என்று. கருத்தடைக்குக் கூட இதை உபயோகப்படுத்தலாமா என்று பார்த்துக் கொண்டிருக்கின்றார்களாம்.

துளசியுடைய மகிமையைத் தெரிந்து தான் முன்னோர்கள் அதை வீடுகளிலே வளர்த்தார்கள். ஆலய வழிபாடுகளிலே அதை உபயோகப்படுத்தினார்கள்.

எது எப்படி இருந்தாலும் மூளை சுறுசுறுப்பாக இருப்பதற்கு இது தேவை என்று தெரிந்து விட்டது. அதன்பின் சும்மா இருக்கலாமா? ஒரு அம்மா சொன்னார்கள் எங்கள் வீட்டுக்காரருக்கு மூளை அதிகம்.

அதிலே எனக்குச் சந்தேகம் இல்லை. ஆனால் அவர் துளசித் தேநீர் சாப்பிட ஆரம்பித்ததன் பின்பு தான் அதை சரியாக உபயோகப்படுத்த ஆரம்பித்தார். என்றார். அது எப்படி என்று கேட்டேன்.


முன்பு எல்லாம் அவர் கதை எழுதி பத்திரிகைக்கு அனுப்புவார். அது வேண்டாம் என்று திரும்பி வந்ததும் என்னிடம் கொடுப்பார் கடையிலே போடுவதற்கு. இப்போது எல்லாம் அவர் கதையை எழுதி நேரடியாகவே என்னிடம் கொடுக்கின்றார் என்று என்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயணிக்க முடியாத நிலையில் அச்சுவேலி-தொண்டைமானாறு வீதி

## புனரமைக்குமாறு மக்கள் கோரிக்கை

**(யாழ்ப்பாணம்)**
**அச்சுவேலி- தொண்டைமானாறு வீதி மிக மோசமான நிலையில் சேதமடைந்துள்ளமையால் குறித்த வீதியால் பயணிக்கும் மக்கள் சிரமங்களிற்கு உள்ளாகியுள்ளனர்.**



குன்றுங் குழியும் நிறைந்த நிலையில் குறித்த வீதி காணப்படுவதால் அவ் வீதியால் பயணிக்கும் மக்கள், வாகன சாரதிகள் சிரமங்களிற்கு மத்தியில் பயணித்து வருகின்றனர்.

ஓகஸ்ட் மாதம் செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த திருவிழா ஆரம்பமாகவுள்ள நிலையில் குறித்த வீதியினால் பயணிப்போர் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும். ஏற்கனவே குன்றுங் குழியுமாக தென்படும் வீதி சேதமடைந்து பயணிக்க முடியாத நிலைய ஏற்படும்.

எனவே இவ் விடயங்கள் தொடர்பில் உரிய தரப்பினர் நடவடிக்கை எடுத்து குறித்த வீதியினை பனரமைத்துத் தருமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர். (நி-6-33)

# கோரமோட்டை ஆற்றில் சட்டவிரோத மணல் அகழ்வு

- நால்வர் கைது
- 3 உழவு இயந்திரங்கள் பறிமுதல்



(தருமபுரம்)
சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் நேற்று முன்தினம் நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் மூன்று உழவியந்திரங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சி இராமநாதபுரம் பொலிஸ் பிரிவுக்குற்பட்ட கோர மோட்டை ஆற்றில் சட்ட விரோதமாக மணல் அகழ்வு இடம்பெறுவதாக கிளிநொச்சி பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலையடுத்து சுற்றி வளைத்த பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் குறித்த கைது நடவடிக்கையை முன்னெடுத்து இருந்தனர்.

மணல் அகழ்வில் ஈடுபட்ட மூன்று உழவியந்திரங்கள் மற்றும் சந்தேக நபர்கள் நால்வரையும் இராமநாதபுரம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

குறித்த சந்தேக நபர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வுள்ளதாக இராமநாதபுரம் பொலிஸார் தெரிவித்தனர். (நி-6-316)

# அபிவிருத்தியடைந்த பிரதேசங்களாக பூநகரியில் இரு வட்டாரங்கள்

## வர்த்தமானி அறிவிப்பு

(கிளிநொச்சி)
கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேசசபை எல்லைக் குட்பட்ட இரு வட்டாரங்கள் அபிவிருத்தியடைந்த பிரதேசங்களாக வர்த்தமானி அறிவிப்பின் மூலம் பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது.

இரணைதீவு உப அலுவலகத்திற்குட்பட்ட முழங்காவில் வட்டாரம் மற்றும் வாடியடி உப அலுவலகத்திற்குட்பட்ட ஞானிமடம் வட்டாரம் என்பவையே அபிவிருத்தியடைந்த பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசின் கடந்த ஜூன் 14 ஆம் திகதி வெளியான வர்த்தமானி அறிவிப்பிலேயே பூநகரி பிரதேசசபை எல்லைக்குட்பட்ட இரு வட்டாரங்கள் அபிவிருத்தியடைந்த பிரதேசங்களாக பிரகடனப் படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# நெல்லுக்கு காவலிருந்தவர் மீது துணுக்காயில் துப்பாக்கி பிரயோகம்


(கண்டாவளை)
முல்லைத்தீவு மாவட்டத்தில் அறுவடை செய்த நெல்லினை வீதியில் காயப்போட்டு காவல்காத்து உறங்கிக் கொண்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் மீது நேற்று அதிகாலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காயமடைந்த நபர் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

துணுக்காய் பிரதேசத்தில் கல்விளான் பகுதியில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. தனது நெல்லினை அறுவடை செய்து வீதியில் காயவைத்து விட்டு இரவு காவல் காத்து வந்துள்ள நிலையில் வீதி ஓரமாக உறங்கிக்கொண்டிருந்த வேளை அதிகாலை 3 மணியளவில் இனம் தெரியாத நபர்களால் இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கல்விளான்குளம் பகுதியினைச் சேர்ந்த கமக்கார அமைப்பின் செயலாளரான 42 அகவையுடைய செல்லையா கிருஸ்ணராஜா என்பவர் படுகாயமடைந்து மல்லாவி ஆதாரவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை மல்லாவி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி-6-315-316)

# சொட்டு நீர்ப்பாசன செய்கை வெற்றி



(தருமபுரம்)
யாழ் பல்கலைக்கழகத்தின் அறிவியல் நகரில் அமைந்துள்ள விவசாய பீடத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் சமுதாய மேம்பாட்டு குழு ஏற்பாட்டில்,

கிளிநொச்சி திருவையாறு பகுதியில் உள்ள விவசாயி ஒருவருக்கு சுமார் மூன்று லட்சம் பெறுமதியான சொட்டு நீர்ப்பாசன உபகரணங்கள் வழங்கி அவற்றினூடாக கத்தரிப் பயிர்ச்செய்கை முன்னெடுத்த நிலையில் அறுவடை விழா நேற்று இடம் பெற்றது.

இவ் அறுவடை விழாவிற்கு பிரதம அதிதியாக வடமாகணத்தின் பிரதமர் செயலாளர் இ.இளங்கோவன் அறுவடையைத் தொடங்கிவைத்தார்.

நிகழ்வில் மாவட்ட அரசாங்க அதிபர் ச.முரளிதரன், வடக்கு மாகாண நீர்ப்பாசன பணிப்பாளர் ந.சுதாகரன், வடக்கு மாகாண விவசாய பணிப்பாளர் செ.சுகந்தினி, யாழ்.பல்கலைக்கழகத்தின் அறிவியல் நகரில் அமைந்துள்ள விவசாய பீடத்தின் பீடாதிபதி, விவசாயிகள் விவசாய பீடத்தின் மாணவர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

யாழ். பல்கலைக்கழகத்தின் விவசாயபீடத்தினால் நவீன தொழில்நுட்பமுறையிலான கிளிநொச்சியில் சொட்டு நீர்ப்பாசனம் மூலம் கத்தரி பயிரிடப்பட்டு நல்ல விளைச்சலைக் கண்டு வெற்றியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6-316)

# கிளிநொச்சியில் இடம்பெற்ற உறுமய வேலைத்திட்ட கலந்துரையாடல்

(கண்டாவளை)
ஜனாதிபதியின் எண்ணக்கருவிற்கு அமைவாக உறுமய காணி அளிப்பு பத்திரங்களை வழங்கும் வேலைதிட்டங்களை விரைவாக முன்னெடுப்பது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்று கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில் வடக்கு மாகாண பிரதம செயலாளர் இ.இளங்கோவன் மற்றும் கண்டாவளை, கரைச்சி, பூநகரி ,பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேச செயலாளர்கள் காணி உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டிருந்தனர்

எதிர்காலத்தில் உறுமய காணி உறுதிப் பத்திரங்களை விரைவாக வழங்குவதற்குரிய வேலைத்திட்டங்களை முன்னெடுப்பது தொடர்பாகவும் விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளது. இதுவரை 1375 உறுமய காணி உறுதி பத்திரங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. ஏனையவற்றையும் வழங்குவதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருவதாக மாவட்ட அரச அதிபர் எஸ்.முரளிதரன் தெரிவித்துள்ளார். (நி-6-315)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 3

காவியத் தொடர்

541



"இளவரசே! நான் தேவலோக கன்னிகை அல்ல ஏழை ஓடக்காரப் பெண். தாங்கள் அருந்தியதும் தேவலோகத்து அமுதம் அல்ல. குழகர் கோயிலில் கிடைத்த பாலமுதம்!" என்றாள்.

"நீ தேவலோக கன்னிகையில்லையென்றால், நான் நம்பி விடுவேனோ? வருணனின் திருப்புதல்வி அல்லவா நீ? சமுத்திரகுமாரி! எத்தனை தடவை எனக்கு நீ உயிர் அளித்திருக்கிறாய்? உனக்கு நான் என்ன கைம்மாறு செய்யப் போகிறேன்?" என்றார் இளவரசர்.

"ஐயா! இன்னும் ஒரு பகலும், ஒரு இரவும் தங்களுடன் இருக்க இந்த ஏழையை அனுமதிக்க வேண்டும்" என்றாள் பூங்குழலி.

"அது எப்படி முடியும்? உடனே நான் பழையாறைக்குப் புறப்பட வேண்டுமே" என்றார் இளவரசர்.

"இல்லை, தங்களை நாகைப் பட்டினத்துக்கு அழைத்துச் செல்லும்படி செய்தி வந்திருக்கிறது."

"யாரிடமிருந்து?"

"இளைய பிராட்டியிடமிருந்துதான்!" "அது யார் அங்கே, இன்னொருவன்? வந்தியத்தேவனுடன் படகை இழுத்து வருகிறவன்?"

"என் அத்தான் சேந்தன் அமுதன். இளையபிராட்டி அவனிடந்தான் செய்தி அனுப்பியிருக்கிறார். தங்களை நாகைப்பட்டினத்தில் உள்ள சூடாமணி விஹாரத்திற்கு அழைத்துச் செல்லும்படி."

"ஆஹா! என் தமக்கையின் மனம் மாறி விட்டதா? எனக்கு முடிசூட்டும் ஆசை அகன்று விட்டதா? வெகு காலமாக எனக்குப் புத்த சங்கத்தில் சேரவேண்டும் என்ற ஆசை உண்டு. புத்த சங்கத்தில் சேர்ந்து பிக்கு ஆவேன். தூர தூர தேசங்களுக்கு யாத்திரை செய்வேன் சாவகம் கடாரம் - மாயிருடிங்கம் மாபப்பாளம் - சீனம்! ஆஹா என்னுடைய பாக்கியமே பாக்கியம் பூங்குழலி! வா, போகலாம்!" என்று கூறி இளவரசர் எழுந்து நின்றார்.

அவருக்கு இன்னும் முழு நினைவு வரவில்லை, சுர வேகத்திலேயே பேசுகிறார் என்று பூங்குழலி சந்தேகித்தாள்.

அதே சமயத்தில் தூரத்தில் ஓலமிடும் குரல் ஒன்று கேட்டது. இளவரசர் திடுக்கிட்டு நின்று, "பூங்குழலி! அது என்ன?" என்றார். "ஆந்தை கத்துகிறது ஐயா!" என்றாள்.

"இல்லை! அது மனிதக் குரல்! ஏதோ பெரும் அபாயத்தில் சிக்கியவனின் அபயக்குரல்! அவனைக் காப்பாற்றிவிட்டுப் போகலாம். புத்த சங்கத்தில் சேருவதற்கு முன்னால் ஒரு புண்ணிய காரியம் செய்யலாம்!" என்று இவ்விதம் கூறிவிட்டு இளவரசர் பாய்ந்து ஓட முயன்றார். அந்த முயற்சியில் திடீரென்று கீழே விழுந்தார். பூங்குழலி அவரைத் தாங்கிக் கொண்டாள்.

படகைக் கரை சேர்ந்தவர்கள் இருவரும் ஓடி வந்தார்கள். மீண்டும் உணர்ச்சியை இழந்துவிட்ட இளவரசரை அவர்கள் மெதுவாகத் தூக்கிக் கொண்டு போய்ப் படகில் பத்திரமாய்ச் சேர்த்துப் படுக்க வைத்தார்கள்.

கால்வாயில் படகு போக ஆரம்பித்தது. இளவரசரைத் தவிர்த்து, மற்ற மூவரும் இட நெருக்கடியுடன் அதில் உட்கார்ந்திருந்தார்கள்.

வந்தியத்தேவன், "பூங்குழலி! நாலுபேரை இந்தப் படகு தாங்குவது கடினம். எப்படியும் நான் உங்களிடம் விடை பெற்றுக் கொள்ள வேண்டியவன். இங்கேயே இறங்கிக் கொள்கிறேன். இளவரசரைப் பத்திரமாய்க் கொண்டு போய்ச் சேர்ப்பது உங்கள் பொறுப்பு. உங்களுக்கு அதிகம் நான் சொல்ல வேண்டியதில்லை!" என்று சொன்னான்.

அவனுடைய குரல் தழுதழுத்தது. நிலாக் கிரணம் அவன் முகத்தில் விழுந்த போது கண்களில் முத்துத் துளிகள் ஒளிவீசித் திகழ்ந்தன.

(தொடரும்)





## சிறுவர் அரங்கம்

## மலைப்பாம்பும் மான்குட்டியும்

(நேற்றைய தொடர்ச்சி...)

குறட்டி மான்குட்டியின்கழுத்தில் மாலையாய் விழுந்தது.

"அம்மா" என்று கதறியது மான்குட்டி. எதிர்பாராத தாக்குதலால் நிலைகுலைந்து போனது. அப்படி இப்படி கூட அசையாமல் நின்றது.

குறட்டிக்குக் கூட ரொம்ப ஆச்சரியமாக இருந்தது. குறட்டி அதன் முகத்தைப் பார்த்தது பாவமாக இருந்தது. அதற்குள் குறட்டி ரப்பர் போன்ற நீண்ட தனது உடலால் மானைச் சுற்றிது.

மான் தேம்பி அழுதது. அதன் கண்களில் கண்ணீர் வழிந்தது.

குறட்டி இப்படி திடீர் தாக்குதல் நடத்தும் போது எந்த ஒரு மிருகமும் இதனிடம் தப்பிக்க போராட்டம் நடத்துமே தவிர இப்படி அழுது ஆர்ப்பாட்டம் செய்யாது.

"ஆமாம். ஏன் அழுகிறாய்" என்றது குறட்டி.

மான் தனது அழுகையை நிறுத்திவிட்டு உறுதியான குரலில் சொன்னது.

"இப்போது சாவு என்பது நிச்சயமாகி விட்டது. சாகும் முன்னர் அம்மாவின் உயிரைக் காப்பாற்றிய பெருமை யாவது என்னைச் சேரும். நீங்கள் மனது வைத்தால் எனக்கு உதவலாம்" என்றது.

"நான் எப்படி உதவ முடியும்?" என்றது.

"[illegible] சென்று நாவல் பழங்களை எடுத்து என் அம்மாவிற்கு கொடுத்து விட்டு மீண்டும் இங்கு வந்து சேருகிறேன். பின்னர் உன் இஷ்டப்படி என்னைக் கொன்று சாப்பிடு" என்றது மான்.

"நீ மீண்டும் என்னிடம் திரும்பி வருவாய் என்பதற்கு என்ன உத்திரவாதம்?"

"நான் சொல்வதில் உனக்கு நம்பிக்கை இல்லை என்றால் நீ என் கூடவே வா.. நாவல் பழங்களை என் தாயிடம் சேர்த்ததும் நீ என்னைக் கொன்று சாப்பிடு"

"உன்னை விட்டால் என்னால் பிடிக்க முடியாது? உன் வேகம் என்ன, என் வேகம் என்ன?" என்றது குறட்டி.

"என் மீது நம்பிக்கை இல்லை என்றால் நீ என்ன சொல்கிறாயே அதற்கு நான் கட்டுப்படுகிறேன்"

"நான் உன் உடலை சுற்றியபடியே இருப்பேன். என்னை சுமந்தபடியே செல்ல வேண்டும்" என்று சொன்னது குறட்டி. அது அதற்கு ஒத்துக் கொண்டது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பக்கூடாதவனை நம்பிக்கெடுவதும் தவறு
நம்பக்கூடியவனை நம்பாமல் கெடுவதும் தவறு
~ கண்ணதாசன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மன்னித்துவிடுங்கள் என்றொலித்த குரல்

பாப்பரசராக இருந்த இரண்டாவது அருளப்பர் சின்னப்பரை ஒருவன் துப்பாக்கியால் சுட்டுக் காயப்படுத்தி விடுகின்றான்.

வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்த பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் தன்னைத் துப்பாக்கியால் சுட்டவனை எதுவும்செய்துவிடாதீர்கள். அவனை மன்னித்து விடுங்கள் எனக் கூறுகிறார்.

இருந்தும் சட்டம் தன் கடமையைச் செய்தது. அவன் சிறையில் அடைக்கப்பட்டான்.

இந்தச் சம்பவம் நடந்து பத்து ஆண்டுகள் கடந்து போயின.

பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பருக்கு ஏற்பட்ட உடல் உபாதை காரணமாக அவருக்கு ஓர் அறுவை சிகிச்சை நடந்தாகிறது.

அவரின் உடல் நலம் தேறிவருகிறது. வைத்தியசாலையில் இருந்தவாறு நிர்வாக ரீதியான கடிதங்களை அவர் பார்வையிடுகிறார்.

அது அவர் பார்த்த முதலாவது கடிதம். திருத்தந்தையே! நீங்கள் விரைவில் குணமடைய வேண்டுமென ஆண்டவனை மன்றாடுகின்றேன். இந்நேரத்தில் என்னை மன்னித்து விடுங்கள் என அந்தக் கடிதத்தில் எழுதப்பட்டிருந்தது.

பத்து ஆண்டுகளுக்கு முன்னர் பாப்பரசரைக் கொல்வதற்காகத் துப்பாக்கியால் சுட்டு தற்போது சிறைத்தண்டனை அனுபவித்து வரும் அந்த நபரே அந்தக் கடிதத்தை எழுதியிருந்தார்.

உண்மை. பத்து ஆண்டுகளுக்கு முன்னர் பாப்பரசரை கொல்ல வேண்டும் என்று நினைத்த ஒருவன்; பத்து ஆண்டுகள் கடந்தபோது, பாப்பரசர் உயிர் வாழ வேண்டும் என ஆண்டவனைப் பிரார்த்திக்குமளவில் மனம் மாறியிருந்தான்.

ஆம், 1983 கறுப்பு ஜுலை அனர்த்தம் நடந்து நேற்று முன்தினத்துடன் (23) 41 வருடங்கள் பூர்த்தியாகிவிட்டன.

கறுப்பு ஜுலை பேரனர்த்தத்துக்காக இந்த நாட்டின் நீதி அமைச்சர் விஜேயதாஸ ராஜபக்ஷ தமிழ் மக்களிடம் மன்னிப்புக் கேட்பதாக அறிவித்துள்ளார்.

ஆம், 2024 ஜுலை 23ஆம் திகதி பாராளுமன்றத்தில் உரையாற்றும்போது 1983 ஜுலை மாதம் இடம்பெற்ற ஜுலை கலவரத்துக்காக தமிழ் மக்களிடம் மன்னிப்புக் கேட்கின்றோம் என நீதி அமைச்சர் விஜேயதாஸ ராஜபக்ஷ கூறினார்.

இவ்வாறு அவர் கூறியபோது, எம் கன்னத்தின் ஓரங்கள் நனைந்து கொண்டன.

உண்மை. 1983ஆம் ஆண்டு தென்பகுதியில் இடம்பெற்ற கறுப்பு ஜுலைக் கலவரத்தில் எத்தனை ஆயிரம் ஆயிரம் தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர். உயிரோடு எரிக்கப்பட்டனர். தமிழ் மக்களின் சொத்துக்கள் கபளீகரம் செய்யப்பட்டன. தீக்கிரையாக்கப்பட்டன.

ஒரு பெரும் காடையர் கூட்டம் தமிழ் மக்களை தேடித் தேடி வெட்டிச் சரித்தது. அந்த நேரத்திலும் தம் வீடுகளில் அடைக்கலம் கொடுத்து தமிழ் மக்களைக் காப்பாற்றிய சிங்கள மக்களை இந்நேரத்தில் நினைந்து பார்க்கிறோம்.

அவர்கள் அன்று செய்தது மிகப்பெரும் நீதி என்பது நீதியமைச்சர் கேட்ட மன்னிப்புக்குள் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதற்கும் மேலாக, இந்த நாட்டின் எந்த நீதியமைச்சர்களும் நினைத்துப் பார்க்காததை நீதியமைச்சர் விஜேயதாஸ ராஜபக்ஷ காலம் கடந்தேனும் நினைந்து தமிழ் மக்களிடம் மன்னிப்புக் கேட்டார் எனும்போது, என்றோ ஒரு நாள் வன்னிப் போரில் தமிழின அழிப்பில் ஈடுபட்டவர்களுக்கு தண்டனை வழங்க வேண்டும் என்பது சிங்களவர்களால் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும். இது சத்தியம்.

# பெருந்தோட்ட மக்களுக்கான வேதனம் அதிகரிக்கப்பட வேண்டும்

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க

*(கொழும்பு)*

பெருந்தோட்ட மக்களுக்கான நாளாந்த வேதனம் அதிகரிக்கப்பட வேண்டும் என்பதே அரசாங்கத்தின் நிலைப்பாடாகும் என ஆளும் தரப்பின் பிரதம அமைப்பாளரும் அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த வேதனத்தை 1,700 ரூபாவாக அதிகரித்து வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் இரத்து செய்யப்பட்டுள்ளது.

இதன்படி, பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வேதனத்தை அதிகரித்துக் கடந்த ஏப்ரல் மாதம் 30ஆம் திகதியும் அதனை உறுதிப்படுத்திக் கடந்த மே மாதம் 21ஆம் திகதியும் வர்த்தமானி அறிவித்தல்கள் வெளியிடப்பட்டன.

குறித்த வர்த்தமானி அறிவித்தல்கள் இரத்து செய்யப்படுவதாக அறிவித்து தொழில் ஆணையாளர் நாயகம் எச்.கே.கே. ஏ.ஜயசுந்தரவினால் ஜுலை 10ஆம் திகதியிடப்பட்ட புதிய வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இந்தநிலையில் குறித்த விடயத்தில் அரசாங்கத்தின் நிலைப்பாடு தொடர்பில் தமிழ் முற்போக்கு கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர் வேலு குமார் நேற்று பாராளுமன்றில் கேள்வி எழுப்பியிருந்தார்.

இதற்கு பதிலளித்த ஆளும் தரப்பின் பிரதம அமைப்பாளரும் அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க, பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வேதனத்தை அதிகரிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் அரசாங்கம் உள்ளதன் காரணமாகவே இந்த விடயத்தில் தலையீடு செய்துள்ளதாகத் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் பெருந்தோட்ட நிறுவனங்கள் நீதிமன்றத்தை நாடியுள்ள நிலையில், நீதிமன்றில் வழக்கொன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளமையினால் அது தொடர்பில் கருத்துரைக்க முடியாத நிலைமை காணப்படுகிறது.

எவ்வாறாயினும், பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வேதனம் அதிகரிக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே அரசாங்கம் உள்ளதாக ஆளும் தரப்பின் பிரதம அமைப்பாளரும் அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார். (ம-7)

## அடுத்த 10 வருடங்களில்

# இளைஞர்களுக்கு உள்நாட்டில் சிறந்த வேலைவாய்ப்பு - ரணில்

*(கொழும்பு)*

இளைஞர்கள் தொழில் தேடி வெளிநாடுகளுக்குச் செல்வதற்கு மாறாக உள்நாட்டிலேயே தேவையான வேலை வாய்ப்புகளை உருவாக்கும் வகையில் பொருளாதார மாற்றத்தை ஏற்படுத்துவதற்குரிய சரியான திட்டத்தை அடுத்த 10 வருடங்களில் செயற்படுத்துவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்துள்ளார்.

இல்லாவிட்டால் கல்விக்காகப் பெருமளவு பணத்தைச் செலவு செய்யும் அரசாங்கத்தின் அர்ப்பணிப்புக்கான பலன் எமது நாட்டுக்குக் கிடைக்காது போகும் எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

இலங்கை தொடர்ந்தும் வளர்ச்சியடையாத நாடாக இருக்கக் கூடாது. புதிய தொழில்நுட்பத்திற்கு ஏற்றவகையில் கல்வி முறையைச் சீர்திருத்த நடவடிக்கை எடுத்து வருவதுடன், அதற்குத் தேவையான நிதி ஒதுக்கப்படும்.

நாட்டில் விவசாய நவீனமயமாக்கல் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், பாரிய தொழில்நுட்பப் பொருளாதாரத்தை உருவாக்க நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

இதற்கு புதிய தொழில்நுட்ப அறிவு கொண்ட இளம் தலைமுறையினர் அவசியம். புதிய பொருளாதாரம் உருவாக்கப்படாவிட்டால், இந்த நாட்டின் மாணவர்களுக்கு எதிர்காலம் இருக்காது எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (ம-7)

# வாகன இறக்குமதிக்கு அனுமதி வழங்குங்கள்

## அரசிடம் கோரிக்கை

உற்பத்தி செய்து ஏழு வருடங்களான வாகனங்களை இறக்குமதி செய்ய அனுமதி வழங்குமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளதாக வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

குறித்த கோரிக்கைக்கு அங்கீகாரம் கிடைத்தால், தற்போதைய சந்தை விலையை விட 60-70 வீதத்திற்கு இடைப்பட்ட குறைந்த விலையில்வாகனத்தைக் கொள்வனவு செய்ய வாடிக்கையாளர்களுக்கு வாய்ப்பு கிடைக்கும் என சங்கத்தின் தலைவர் இந்திக்க சம்பத் மெரஞ்சிகே தெரிவித்தார். (ம-7)

# பல திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய நபர்

## போதைப்பொருட்களுடன் கைது

*(கொழும்பு)*

கொஹூவல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பல்வேறு திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேக நபரொருவர் போதைப்பொருளுடன் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (23) கைதுசெய்யப்பட்டுள்ளதாக கொஹூவல பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தெஹிவளை பிரதேசத்தைச் சேர்ந்த 39 வயதுடைய நபரொருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடமிருந்து 10 கிராம் 200 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருள், 3 கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் அமெரிக்க டொலர்கள் ஆகிய பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொஹூவல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

# கொழும்பில் பேருந்தை கடத்தியவரால் பரபரப்பு

*(கொழும்பு)*

நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பேருந்தை திருடிச் சென்ற நபர் ஒருவரை மொரட்டுவை, ராவத்தவத்த பிரதேசத்தில் வைத்து பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பாணந்துறை, மினுவன்பிட்டிய பொது மயானத்திற்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பேருந்தையே சந்தேக நபர் கடத்திச்சென்றுள்ளார்.

மினுவன்பிட்டிய பிரதேசத்தை சேர்ந்த 52 வயதுடைய நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

(ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துரியன் மாதிரி செய்கை வலய செயற்பாடுகள் ஆரம்பம்

## விவசாய அமைச்சு நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கையில் முதலாவது துரியன் மாதிரி செய்கை வலயத்தை ஆரம்பிக்க விவசாய அமைச்சு தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை ஹார்ட் லேண்ட் அதிகார சபையின் பங்களிப்பின் கீழ் ஹடுகல, எகொடபத்த, தெஹிகஹஹேன மற்றும் வாரபிட்டிய உள்ளிட்ட நான்கு கிராமங்களை மைய மாகக் கொண்டு இந்த பயிர்ச் செய்கை வலயத்தை நிறுவவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு ஊட்டச்சத்து தரம் காரணமாக துரியன் உலகில் அதிகம் தேவைப் படும் பழமாக கருதப்படுகின்றமையினால் வலஸ்முல்லையில் முதலாவது துரியன் மாதிரி செய்கை வலயத்தின் செயற்பாடுகள் விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மகிந்த அமரவீர தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது. மேலும் ஏற்றுமதி இலக் குடன் ஆரம்பிக்கப்பட்டுள்ள துரியன் மாதிரி சாகுபடி வலயத்தின் கீழ் முதற்கட்டமாக 2500 துரியன் செடிகள் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# வட்டி வீதங்களைக் குறைக்க மத்திய வங்கி தீர்மானம்

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கி அதன் கொள்கை வட்டி வீதங்களைக் குறைப்பதற்குத் தீர்மானித்துள்ளது.

மத்திய வங்கியின் நிலையான வைப்பு வசதி வீதம் மற்றும் நிலையான கடன் வசதி வீதம் ஆகியவற்றை முறையே 25 அடிப்படை புள்ளிகளால் குறைப்பதற்கு மத்திய வங்கியின் நாணய சபை தீர்மானித்துள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற இலங்கை மத்திய வங்கியின் நாணய சபைக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி, நிலையான வைப்பு வசதி வீதம் மற்றும் நிலையான கடன் வசதி வீதங்கள் முறையே 8.25 சதவீதம் மற்றும் 9.25 சதவீதமாகக் குறைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# தேர்தல்கள் ஆணைக்குழுவின் முக்கிய கூட்டம் ஒத்திவைப்பு

(கொழும்பு)

நேற்று நடைபெறவிருந்த தேர்தல்கள் ஆணைக்குழுவின் முக்கிய் கலந்துரையாடல் ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது

இதன்போது ஜனாதிபதித் தேர்தலை நடத்துவது தொடர்பிலும் அதன் திகதியை தீர்மானிப்பது தொடர்பில் கலந்துரையாடவும் தீர்மானிக்கப் படவிருந்தது.

எவ்வாறான சமூகப் பேச்சுக்கள் இடம்பெற்றாலும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் கூறியது போன்று இந்த வாரம் ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்படும் என பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

மேலும் ஜனாதிபதித் தேர்தல் திகதி தொடர்பான வர்த்தமானி இந்த வார இறுதிக்கு முன்னர் வெளியிடப்படும் என்றும் தேர்தல்கள் ஆணைக் குழு குறிப்பிட்டுள்ளது. (நி-6)



உலக மெய்வல்லுநர் சங்கத்தில் ஆங்கில மொழி மூலமான எழுத்துப் பரீட்சை நடைபெற்று கடந்த வாரம் தியகம மைதானத்தில் நடைபெற்ற கனிஷ்ட பிரிவினருக்கான தேசிய மட்ட தடகளப் போட்டியில் செயன்முறை பரீட்சையில் வடமாகாணத்தைச் சேர்ந்த 8 பேர் சித்தி அடைந்துள்ளதுடன் தேசிய மெய்வல்லுநர் தீர்ப்பாளர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

(படம்- கனகராஜா)

# facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3178

Search for people, places and things


### லோஜன்

வாழ்க்கையில் எடுக்கிறது பூரா தப்பான முடிவு...
இதில அடுத்தவனுக்கு அட்வைஸ் பண்ணும் போது மட்டும் தெளிவாக இருக்கிறது




### மேசாக்

மச்சான் மாஸா ஒரு போஸ் குடுடா




### டஜின்

சண்டைக்காரன் வீட்டுல கூட சாப்பிட்டுடலாம்



வீட்டில சண்டை போட்டுட்டு பொண்டாட்டி கையல மட்டும் சாப்பிடவே கூடாது

### சுவன்யா

அப்பாடா ஆடி பிறந்திடுச்சு ஒரு மாதம் யாரும் கல்யாணம் காது குத்து என்று பத்திரிகை வராது



இந்த மாதம் செலவு பண்ணாமல் கொஞ்சம் சேமிக்க முடியுமா என்று பார்ப்போம்

### நவீன்

நம்ம வாழ்க்கையில செல்வமும் மகிழ்ச்சியும் பொங்கிட்டு வரும் என்று பார்த்தால்



கவலையும் கோபமும் தான் பொங்கிட்டு வருது

### கீர்த்தனா

காலையில நல்லா தான் ஆரம்பிக்குது



மதியானத்துக்குள்ள ஏதாவது ஒரு ஏழரை வந்திருது

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருட்களின்...

னம் சில அத்தியாவசிய பொருட்களின் விலையை குறைக்கத் தீர்மானித்துள் ளது.

சதொச பால்மாவின் 400 கிராம் பொதியின் முன்னைய விலை 950 ரூபா யாகவும் புதிய விலை 910 ரூபாயாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஒரு கிலோ பச்சைப்பயிறு முன் னைய விலை 998 ரூபாயாகவும், புதிய விலை 965 ரூபாய். நெத்தலி ஒரு கிலோ முன்னைய விலை 978 ரூபாயாக இருந்த நிலையில் புதிய விலை 950 ரூபாய். இந்திய பெரிய வெங்காயம் ஒரு கிலோ முன்னைய விலை 305 ரூபாயாகவும், புதிய விலை 285 ரூபாய். ஒரு கிலோ கடலையின் முன்னைய விலை 455 ரூபாயாகவும்,

புதிய விலை 444 ரூபாய். ஒரு கிலோ வெள்ளைச் சீனியின் முந்தைய விலை 263 ரூபாயாகவும்,

புதிய விலை 258 ரூபாய். ஒரு கிலோ வெள்ளை அரிசியின் முந்தைய விலை 204 ரூபாயாகவும், புதிய விலை 199 ரூபா. ஒரு கிலோ பாகிஸ்தான் பெரிய வெங்காயத்தின் முன்னைய விலை 190 ரூபாயாகவும், புதிய விலை 185 ரூபாயாகவும் நிர்ணயிக்கப்பட்டுள் ளது. (ம-7)

## முகாமைத்துவ...

விசாரணை செய்து முறையான முகா மைத்துவத்தின் கீழ் கொண்டு வருவ தற்கு தயார் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

அத்துடன் 1,600க்கும் மேற்பட்ட அரசாங்கத்திற்குச் சொந்தமான நிறு வனங்கள் உள்ளதாகவும், அவற்றின் சொத்துக்கள் சரியான முறையில் நிர் வகிக்கப்படவில்லை எனவும் அமைச் சர் மேலும் சுட்டிக்காட்டினார்.

அந்த நிறுவனங்களில் சுமார் 91,000 வாகனங்கள் இருப்பதாகவும் நிலை யான சொத்துக்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தி அவற்றை முறை யாக முகாமைத்துவம் செய்து மக் களுக்கு பயனுள்ள சேவையை வழங்க அரசாங்கம் தயாராக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வினால் நிதியமைச்சர் என்ற வகையில் முன்வைக்கப்பட்ட இது தொடர்பான சட்டமூலத்திற்கு அமைச்சரவை அங்கீ காரம் வழங்கியுள்ளது. (ம-7)

## பாராளுமன்றம்...

அரசாங்கம் அறிவித்துள்ளது.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாட்டில் அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்த்தன இதனை அறி வித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"வரவு செலவு திட்டத்தில் ஜனாதி பதித் தேர்தலுக்கு மாத்திரமே நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. எனவே இந்த ஆண்டில் ஜனாதிபதித் தேர்தல் மாத் திரமே இடம்பெறும்.

பாராளுமன்றத்தை கலைக்க முடி யாது. பொதுத் தேர்தலும் இந்த ஆண்டு இடம்பெறமாட்டாது. அரசிய லமைப்பின் பிரகாரம் நடத்தப்பட வேண்டிய தேர்தல்கள் அனைத்தும் முறைப்படி நடத்தப்படும் என்றார்.(ம-7)

## தென்னக்கோனு...

பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோனுக்கு உயர்நீதிமன்றம் விதித்த இடைக்காலத் தடை தொடர் பான சட்டத்தன்மையை ஆழமாக ஆராய்ந்து, இன்னும் 2 தினங்களுக் குள் அமைச்சரவை நிலைப்பாட்டை அறிவிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வின் தலைமையில் நேற்று அவசர அமைச்சரவைக் கூட்டம் ஒன்று நடை பெற்றது.

இதன்போது பொலிஸ்மா அதிபர் குறித்த உயர் நீதிமன்றின் உத்தரவு தொடர்பாகக் கருத்தாடல்கள் இடம் பெற்றதுடன், இந்த உத்தரவில் பல் வேறு சட்டத்தன்மை சார்ந்த குழப்பங் கள் இருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட் டது.

உயர் நீதிமன்றத்தின் இந்த உத் தரவு நேற்றுப் பிற்பகல் அளவிலேயே அமைச்சரவைக்குக் கிடைக்கப் பெற் றது.

இந்த உத்தரவின் சட்டத்தன்மை மற்றும் அதன் குழப்பங்கள் தொடர் பாக ஆழமாக ஆராய வேண்டி இருப் பதாக அமைச்சரவை கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இதன்[illegible] ஆராய்ந்து எதிர்வரும் 2 தினங்களுக் குள் அமைச்சரவையின் நிலைப் பாட்டை அறிவிப்பதற்கு, நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக் கப்பட்டதாகவும் தெரியவருகிறது. (ம-7)

*(மற்றொரு செய்தி உள்ளே)*

## செம்மலை நீராவி...

கப்பட்டு பொங்கல் உற்சவத்தினை தடுக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட் டது.

முல்லைத்தீவு - பழைய செம்மலை நீராவியடிப் பிள்ளையார் ஆலய வரு டாந்த பொங்கல் உற்சவம் பாரம்பரிய முறைப்படி கோட்டைக்கேணி பிள்ளை யார் ஆலயத்திலிருந்து மடப்பண்டம் எடுத்து வரப்பட்டு உற்சவம் ஆரம் பித்து நேற்றைய தினம் பொங்கல் உற்சவம் இடம்பெற்றது.

இந்நிலையில் மாலை நேரம் ஆலய வளாகத்திற்குள் மீன் வியா பாரம் மேற்கொள்ளும் கூலர் ரக வாக னம் ஒன்றினை பொலிஸார் உள்ளே அழைத்து குறித்த வாகனத்தினால் ஆலயத்திற்கு செல்லும் மின் சார வயர் அறுக் கப்பட்டதனால் பொலிஸார், பிக்கு மற்றும் ஆலய நிர்வாகத் தினருக்கிடையே முறுகல் நிலை ஏற்பட்டிருந்தது.

பொங்கல் உற் சவம் நடைபெற்ற வேளை திட்ட மிட்டு குழப்பும் நோக்கோடு ஆலய வளாகப் பகுதிக்குள் மீன் ஏற்றும் கூலர் ரக வாகனம்கொண்டு வரப்பட்டு ஆல யத்திற்கு மின் வழங்கும் வயர் அறுத்து விடப்பட் டுள்ளது.

இதனால் ஆலயத்தில் மின் தடை ஏற்பட்டி ருந்தது. அத் தோடு அறுத்து விடப்பட்ட மின் வயறினால் மின் தாக்கும் அபாய மும் ஏற்பட்டுள் ளது. இவ்வா றான செயற்பாடு கள் ஆலய உற் சவத்தினை குழப் பும் நோக்கிலேயே மேற்கொள்ளப் பட்டுள்ளது.

அத்தோடு நேற்று முன்தினம் (23) ஆலயத் திற்கு சென்ற பொலிஸ், இரா ணுவம் மற்றும் தொல்பொருள் திணைக்களத் தினர் ஆலயப் பணிக்காகவருகை தந்த பூசாரி உள் ளிட்டவர்களுக்கு அச்சுறுத்தல் விடுத்துள்ளதாக ஆலயப் பூசகர் தெரிவித்திருந் தார்.

முல்லைத்தீவு பழைய செம்மலை நீராவியடி பிள்ளையார் ஆலய வளா கத்தை அபகரித்து சட்ட விரோதமாக பௌத்த விகாரை அமைத்து பல்வேறு நெருக்கடிகள் வழங்கப்பட்டு வந்திருந் தது. தற்போது குறித்த ஆலயத்தின் வழிபாடுகள் தொடர்ச்சியாக ஆலய நிர் வாகத்தினரால் மேற்கொள்ளப்பட்டு வரு கின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7,299)

## ஜனாதிபதித்...

ஜனாதிபதித் தேர்தல் எப்போது நடத் தப்படும் என கொழும்பில் ஊடகவிய லாளர்கள் கேட்டபோதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார். இது தொடர் பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேர்தலுக்கான திகதியை வெள்ளிக் கிழமை அல்லது அதற்கு முன்னர் அறி விக்க ஏற்பாடு செய்துள்ளோம் என்றார்.

ஜனாதிபதித் தேர்தல் செப்ரெம்பர் 17 முதல் ஒக்ரோபர் 16 வரை நடைபெற உள்ளது. இதனால், அடுத்த இரண்டு நாட்களில் தேர்தல் தொடர்பான அறி விப்பு வெளியிடப்படும். (ம-7)


மஹஜன சம்பத
திகதி 2024.07.24
சீட்டிழுப்பு இலக்கம் 5544
M 9 5 2 8 7 8
அத சம்பத M 2 8 7 8
சீட்டிழுப்பு இலக்கம் 119

தன நிதானய
திகதி - 2024.07.24
சீட்டிழுப்பு இலக்கம் - 1574
P 09 18 20 61 P
51702

மெகா பவர்
திகதி 24/07/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1892
G 23 21 33 71 79
56262

லக்கி 7 VIP
திகதி 2024.07.24
சீட்டிழுப்பு இலக்கம் 370
W 3 0 2 1 0 6 W

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3786
சீட்டிழுப்பு திகதி 24.07.2024
U 11 12 44 80
U 50881

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.07.24
சீட்டிழுப்பு இலக்கம் 0853
மீனம் 12 48 56 60 மீனம்
63430 30

உத்தியோகபூர்வ முடிவுகள்
24.07.2024 வெற்றி வாரம் 252 வர்ணம் பச்சை
R 2 8 4 3 3 9
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.22,233,848.00
53939

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2518 வர்ணம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 24.07.2024 தினம் புதன்கிழமை
03 14 62 74 C
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 100,608,536.00

சனிதா
திகதி 2024.07.24 வெற்றி வாரம் 4679
06 19 33 73 B
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.66,177,678.40
81691

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4230 வர்ணம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2024.07.24 தினம் புதன்கிழமை
10 25 42 51 கன்னி
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,217,126.40
920568

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
O 16 06 17 47 50
1694 இள நீலம் 24.07.2024 புதன்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 534,957,689.40

ஜயோதா Jayoda
திகதி 2024.07.24 வெற்றி வாரம் 2045 வர்ணம் மஞ்சள்
10 16 35 44 V
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.24,535,846.80

அத கோடிபதி ADA KOTIPATHI
புதன்கிழமை வெற்றி வாரம் : 2344 சீட்டிழுப்பு திகதி : 2024.07.24
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.53,069,247.20
03 09 13 20 I
227203


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். நீதி மன்றத்திற்கு வழக்கொன்றுக்கு வந்தவரை

## வாள்கொண்டு துரத்தியவர் கைது

யாழ்ப்பாணம் நீதவான் நீதி மன்றத்தில் வழக்கொன்றுக்கு வந்து விட்டு திரும்பிய ஒருவரை வாள் கொண்டு துரத்திச் சென்ற சந்தேக நபரொருவர் நேற்று கைது செய்யப்பட்டார்.

இராசாவின் தோட்ட வீதியில் உள்ள வீடொன்றில் 24 வயதான சந்தேக நபர் பதுங்கியிருந்தபோது யாழ்ப்பாண பிராந்திய பொலிஸ் புலனாய்வாளர்களுக்கு கிடைத்த தகவலுக்கமைய கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கடந்த மே மாதம் 30ம் திகதி யாழ்ப்பாணம் நீதவான் நீதி மன்றத்தில் வழக்கொன்றுக்கு வந்து விட்டு திரும்பிய ஒருவரை வாள் கொண்டு மூவர் துரத்திச் சென்றுள்ளனர்.

இதனால் அச்சமடைந்தவர் மீண்டும் நீதிமன்ற வளாகத்திற்குள் புகுந்து தஞ்சம் கோரியுள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் நீதவான் கட்டளைக்கமைய சந்தேக நபர்களை கைது செய்ய உத்தரவிடப்பட்டது.

இதனையடுத்து குறித்த சம்பவம் தொடர்பாக ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டு யாழ்ப்பாணப் பிராந்திய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

வாள் வெட்டு சம்பவங்கள் தொடர்பில் சந்தேக நபர் மீது நான்கு திறந்த பிடியாணைகள் காணப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-7,33)

# கோவிட் காலத்தில் கட்டாய உடற் தகனத்தை மன்னிப்பு கோரி தப்பிக்க முடியாது

## சபையில் எதிர்க் கட்சித் தலைவர்

(கொழும்பு)

கோவிட் -19 தொற்று காலப்பகுதியில் இலங்கையில் முன்னெடுக்கப்பட்ட கட்டாய உடற் தகனக் கொள்கைக்கு மன்னிப்பு கோருவதற்கான அமைச்சரவையின் முடிவை வரவேற்பதாகத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தார்.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றிய போதே, அவர் இந்த கோரிக்கையை முன்வைத்தார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அமைச்சரவையில் அங்கம் வகித்த அமைச்சர்கள் கட்டாய உடற் தகனக் கொள்கைக்கு அப்போது ஆதரவளித்தனர்.

இதன் மூலம் முஸ்லிம் மக்களின் சமய, கலாசார உரிமைகள் முற்றாக மீறப்பட்டன.

முஸ்லிம்களை இலக்கு வைத்து அடக்கமா, தகனமா என்ற விவகாரம் தொடர்பில் கோட்டாபய ராஜபக்ஷவின் அமைச்சரவை தவறான தீர்மானத்தை எடுத்தது.

இந்த தீர்மானம் எந்த நபரின் அறிக்கையின் அடிப்படையில் எடுக்கப்பட்டது?

அதற்கான ஆலோசனை வழங்கியது யார்? இந்த ஆலோசனை தொடர்பாக அரசியல் தலைமைகள் பரிசீலித்து ஆராய்ந்து பார்க்காததன் காரணம் என்ன? போன்ற விடயங்கள் தொடர்பான காரணங்களை முன்வைக்க வேண்டும்.

எனவே இந்த விடயத்தில் மன்னிப்பு கோரி, தப்பிக்க முடியாது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சுட்டிக்காட்டினார். (ம-7)

# விவாகரத்து சட்டத்துக்கு பதிலாக புதிய சட்டத்தை அமுலாக்க திட்டம்

## நீதியமைச்சர் விஜேயதாஸ ராஜபக்ஷ

விவாகரத்து சட்டத்தை முற்றாக நீக்கிவிட்டு, தவறு இல்லாத விவாகரத்து என்ற புதிய சட்டத்தை அறிமுகப்படுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக நீதியமைச்சர் விஜேயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

'தவறு இல்லாத விவாகரத்து' சட்டமூலம் தற்போது இறுதி செய்யப்பட்டுள்ளதாகவும், நீண்ட விசாரணையின்றி விவாகரத்து வழக்குகளில் தீர்ப்பு வழங்க புதிய சட்டமூலம் நீதிமன்றங்களுக்கு அதிகாரம் வழங்குவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

புதிய பரஸ்பர அங்கீகாரம், பதிவு செய்தல் மற்றும் வெளிநாட்டு தீர்ப்புகளை அமுல்படுத்துதல் சட்டமூலம், விவாகரத்து வழக்குகளில் வெளிநாட்டு நீதிமன்றங்கள் வழங்கும் தீர்ப்புகளை இலங்கை நீதிமன்றங்கள் அங்கீகரிக்க அனுமதிக்கும் என்று அவர் கூறுகிறார்.

நேற்று முன்தினம் நிறைவேற்றப்பட்ட சிவில் நடைமுறைச் சட்டம் (திருத்தம்) சட்டமூலத்தில் மின்னஞ்சல், வாட்ஸ் அப் போன்ற மின்னணு வழிமுறைகள் மூலம் அறிவிப்பதற்கான விதிமுறைகள் அடங்கியிருப்பதாக அமைச்சர் கூறினார்.

விவாகரத்து வழக்குகளில் மற்ற தரப்பினர் வேறொரு நாட்டிற்கு குடிபெயர்ந்தபோது, பதில் அளித்தவர்களுக்கு நோட்டீஸ் கொடுக்காமல் இருப்பது போன்ற நடைமுறைச் சிக்கல்கள் எழுந்துள்ளதாக அவர் தெரிவித்திருந்தார். (ம-7)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-0856) 076 825 7716 (ஆகாஸ்)

விசாக்கான (Show money)

வங்கி இருப்பு உறுதிப்படுத்தி தரப்படும்.

1%
- Visit visa
- Student visa
- Fixed & saving
- லட்சத்திற்கு 1000 மட்டுமே

(187)

சகல நாடுகளுக்குமான விசா சேவைகள்

தொடர்பு : 075 033 6759

உ

சுவாமியே சரணம் ஐயப்பா



காரைநகர் வியாவில்பதி ஆதிஷேத்திரம்
திருவருள்மிகு பூரணா புஷ்கலா சமேத ஹரிஹரபுத்ர
ஐயப்ப சுவாமி தேவஸ்தானம்
திவ்ய மஹோற்சவ விஞ்ஞாபனம் - 2024

கிரியாகால நிகழ்வுகள்

ஆடி 09ஆம் நாள் 25.07.2024 வியாழக்கிழமை
மாலை 6.00 மணிக்கு கணபதி பூஜை, மாலை 7.00 மணிக்கு அனுக்ஞை, கிராமசாந்தி, வாஸ்துசாந்தி, மிருத்சங்கிரணம்

ஆடி 10ம் நாள் 26.07.2024 வெள்ளிக்கிழமை
காலை 6.00 மணிக்கு அபிஷேகம், விசேட பூஜை, 8.00 மணிக்கு வசந்த மண்டப பூஜை, 10.00 மணிக்கு கொடியேற்றம் நவசக்தி ஆவாகனம், மாலை 6.00 மணிக்கு மஹா சாஸ்தா யாகாரம்பம்

ஆடி 17ம் நாள் 02.08.2024 வெள்ளிக்கிழமை
மாலை 5.00 மணிக்கு வேட்டைத் திருவிழா, இரவு 8.00 மணிக்கு வசந்த மண்டப பூஜை, சகோபுர உற்சவம்

ஆடி 18ம் நாள் 03.08.2024 சனிக்கிழமை
காலை 6.00 மணிக்கு அபிஷேகம், விசேட பூஜை, 8.00 மணிக்கு வசந்த மண்டபப் பூஜை, 9.00 மணிக்கு இரதோற்சவம், 10.30 மணிக்கு பச்சை சாத்தி இரத அவரோகணம், பிராயசித்த அபிஷேகம்

ஆடி 19ம் நாள் 04.08.2024 ஞாயிற்றுக்கிழமை
ஆடி அமாவாசை விரதம், காலை 6.00 மணிக்கு அபிஷேகம், விசேட பூஜை, 8.00 மணிக்கு வசந்த மண்டபப் பூஜை, தீர்த்தோற்சவம், மகாயாக அபிஷேகம், பூஜை, மாலை கொடியிறக்கம் சந்தி விசர்சனம், மௌன உற்சவம், ஆச்சாரிய உற்சவம், அருளுரை.

ஆடி 20ம் நாள் 05.08.2024 திங்கட்கிழமை
மாலை 7.00 மணிக்கு ஊஞ்சல், உள்வீதி உற்சவம், திருக்கல்யாணம், வெளிவீதி உற்சவம்

ஆடி 21ம் நாள் 06.08.2024 செவ்வாய்க்கிழமை
காலை 10.00 மணிக்கு பிராயசித்த அபிஷேகம், மாலை 5.00 மணிக்கு வைரவர் பொங்கல், பூஜை வழிபாடு

வியாவில், காரைநகர் சுபம் (C-849) ஆலய அறங்காவலர்

வங்கி மீதி வசதி (Show money)

சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக் கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்

தொடர்புகளுக்கு: (182)

074 17 37 684

வேலையாட்கள் தேவை

மானிப்பாயில் இயங்கும் பேக்கரி ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை. பழக விரும்புவர்களும் தொடர்பு கொள்ளலாம். (ஆண்/பெண்) (189)

வேலைநேரம் : 12.30pm - 12.00am

077 325 3610

V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
- கனடா PASSPORT APPOINMENTS

விமான பயணச்சீட்டுக்கள்
- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-0855)

தோட்டக்காணி விற்பனைக்கு

கரணவாய் தேன்புளியடி என்னும் இடத்தில் 3½ பரப்பு தோட்டக்காணி விற்பனைக்கு உண்டு. விழுந்தாலடியின் தெற்குப் பக்கமாக 300m தொலைவில் அமைந்துள்ளது. (188)

தொடர்புக்கு:
076 101 9080

Care Giver - பராமரிப்பாளர்

கனடா, அமெரிக்கா, ஜேர்மனி
போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினை பெறக்கூடிய கற்கை நெறி - 1 Year Diploma

கனடாவில் புதிதாக உள்வாங்கப்படவுள்ள நிரந்தரகுடியுரிமையுடனான 15'000 Care Giver வாய்ப்புக்களுக்கான சர்வதேச தரமிக்க Diploma சான்றிதழுடன் Care Giver கற்கை நெறி மற்றும் Immigration Services - விசா சேவைகள்.
(இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்)

CIMS College
49A, Chapel Street, Jaffna.
(C-0855)

College Of International Migration Skills
077 068 777 / 077 7719 322

அனைத்து நாடுகளுக்குமான
விமான பயணச்சீட்டுக்கள்
குறைந்த விலையில்
- Air Ticket Date Change
- Travel Insurance
- Online Visa Appoinments
- Travel Itinerary
- Sri Lanka Visa Extension
- All Country Visa Services
(C-0855)

உங்கள் அருகாமையில் எமது நேரடி கிளைகள்
கொழும்பு | மட்டக்களப்பு | திருகோணமலை | கிளிநொச்சி
புதுக்குடியிருப்பு | கொடிகாமம் | சாவகச்சேரி | புத்தூர்
யாழ்ப்பாணம் | நாச்சிமார் கோவிலடி | பண்டத்தரிப்பு
சுன்னாகம் | மானிப்பாய் | சங்கானை | கோப்பாய்
நெல்லியடி | பருத்தித்துறை | வல்வெட்டித்துறை

V2 TRAVELS 0768226240 0768226241


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.07.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.